JANASAKTHI போன்: 84097 4 பக்கம் ஒரு அணு மலர் 8 இதழ் 255 இலங்கை 10 சதம் REGD. NO. M. 5934

சீனுவிற்கு பிரிட்டிஷ் கம்பளி

பிராட்போர்ட், ஆக. 28—

5,68,000 பவுன் மதிப்புள்ள கம்பளி, கம்பளத் துணி ஆகியவைகளுக்கு சீன 60 பிரிட்டிஷ் கம்பெனிகளிடம் ஆர்டர் கொடுத்துள்ளது. மாஸ்கோவில் நடைபெற்ற சர்வ தேசப் பொருளாதார மகாநாட்டுக்குப் பின்னர்தான் இந்த வர்த்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

நவம்பர் 5-ந் தேதிக்குள் இந்தக் கம்பளி யெல்லாம் சீனவிற்கு ஏற்றுமதியாய்விடும் என்று லண்டன் ஏற்றுமதி கார்ப்பொரேஷன் டைரக்டர் தெரிவித்தார்.

ஜனசக்தி

சென்னை	நந்தன, ஆவணி 16உ	ஞாயிற்றுக்கிழமை	1952, ஆக. 31
வெளியூர்	நந்தன, ஆவணி 17உ	திங்கட்கிழமை	1952, செப். 1

யுத்தத்தைத் தடுப்பது நமது முதற்கடமை

5-வல்லரசு மகாநாடு கூட்ட நேரு முன்வருக

சென்னையில் சமாதான மகாநாடு

சென்னை, ஆக. 31—

கோகலே மண்டபம் நிரப்பி வழிந்து சென்னையின் சகல பகுதி மக்களின் சிறந்த பிரதிநிதிகளால். தாம்பரத்திலிருந்து நூற்றுக்கணக்கான இளைஞர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள் மிக உற்சாகமாக ரயில் நெடுக சமாதான கோஷங்களை விண்ணதிர எழுப்பிக்கொண்டு மகாநாட்டுக்கு வந்து சேர்ந்தது கண்கொள்ளாக்காட்சி! மண்டபம் முழுவதும் ஆசியாவை விட்டு வெளியேறு, ஆசியாவில் சமாதானத்தை இந்தியா நிலைநாட்ட முடியும், அணுகுண்டைத் தடை செய், விஷக்கிருமி யுத்தத்தைத் தடை செய், ஆசிய சமாதானத்தில் இந்தியாவும் - சீனுவும் ஒன்றுபட்டு நிற்கும், ஜப்பான், ஜெர்மனி ஆயுத விஸ்தரிப்பைத் தடுப்போம், உலக சமாதான இயக்கம் ஓங்குக என்று பொறிக்கப்பட்ட பதாகைகள் எங்கும் பறந்தன. பிகாசோ வெண்புரு மகாநாட்டின் பின்னணியாக காட்சியளித்தது. எங்கு நோக்கினும் சமாதான வெண்புருக்கள் மயமாகக் காணப்பட்டன. பிரதிநிதிகள் மீதெல்லாம் சிறகடித்துப் பறந்தன. சமாதான உணர்வு சகலரிடையேயும் பதிந்தது என்று சொல்லுவது மிகையாகாது.

திரு. வி. க. பொன்னுரை

மகாநாட்டைத் திறந்து வைத்துப் பேசியதாவது: "கோகலே மண்டபம் சமாதானத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததாகும். சமாதானம் என்பது மனித இனத்துக்கு மிக உரியது. உலகு உய்யத் தோன்றிய பெரியார்கள் புத்தர், கிருஸ்து, திருவள்ளுவர், முகம்மது, மகாவீரர், டால்ஸ்டாய், மார்க்ஸ் போன்றவர்கள் எல்லாம் சமாதான பிரியர்களே. நிலை பெயராத சமாதானத்தை உலகில் நிலைநிறுத்தப் பாடுபட்டவர் காரல் மார்க்ஸ் என்பது அவரது நூல்களிலிருந்து விளங்கும்.

வேதாந்தப் பாடல்களில் எல்லாம் சாந்தி, சாந்தி, சாந்தி என்று கூறுவதைக் காணலாம். சாந்தத்தை உட்கொள்ளாத கலை கலையாகாது. ஆதி மனிதன் சமாதான உள்ளம் உடையவனாக இருந்தான். இன்று மனிதன் அணுகுண்டு செய்வதுவரை வந்திருக்கிறான்.

உலக சரித்திரத்தை ஆராய்ந்தால் [illegible] போர், போர், போர், கொலை, கொலை, கொலை என்று [illegible] நிறைந்திருப்பதைக் காணலாம். இதுதான் உலகை நாசம் செய்து வருகின்றது. அதனால்தான் இன்று உலக முழுவதும் சமாதான இயக்கப் பேரொலி முழங்க ஆரம்பித்துள்ளது.

வாழப் பிறந்தோம்

இரண்டு யுத்தங்களின் அனுபவம் நமக்கு நன்கு தெரியும். [illegible] முயன்றால் ஏதாவது கோளாறு இருக்கவேண்டும். யுத்தத்தைத் தடுக்க வேண்டியது நமது முதற்கடமை.

5 வல்லரசு மகாநாட்டைக் கூட்ட இந்தியா முயல வேண்டுவது மிகமிக அவசியம். 2000 ஆண்டுக்கு முன்னே புறநானூற்றிலே பாடிய தமிழ்ப் புலவர் வாழும் வகை சொல்கின்றான்.

அவர்களுக்கு வானவில் தெரியும்; கொலை வில்லறியார், உழுபடை தெரியும், கொலைப் படை தெரியாது. அடக்கு முறை அறியார்; கொலைக் களம் தெரியார். நெருப்பு, சூரியன் என்ற வெப்பம் தவிர வேறு வெம்மை அதாவது அடக்குமுறை இல்லை.

புலவர்களும், பொதுமக்களும் உள்ள இந்த நாட்டிலே, சமாதானத்தை நிலைநாட்ட பிரதமர் நேரு முயல வேண்டும். ஆனால் அவர் சிறிது தயங்குகிறார். சிங்கத்துக்கு இரு நோக்கு உண்டு. அது [illegible] உலகம் உள்ளளவும் அது பெருமை தரும். நம் நாட்டில் அருளாட்சி, நடைபெற வேண்டும் என்பது தான் நம் அவா.

இமயமும், கங்கையும், காவிரியும், சமாதானமும் இருக்கும் இந்தியாவில் சமாதானம் நிலவும்படியான 5 வல்லரசு மகாநாடு நடைபெறும் என்று கூறி இந்த மகாநாட்டைத் திறந்து வைக்கிறேன். என்றார்.

காஞ்சியா தலைமையுரை

மகாநாட்டுக்குத் தலைமை வகித்த திரு, காஞ்சியா பேசுகையில்,

தென்னிந்திய சமாதானம், முன்னேற்றம், அறிவாற்றலுக்குப் பெயர் போனது. இங்கு வர வாய்ப்புக் கிடைத்ததற்கு மகிழ்கின்றேன்.

சமாதான இயக்கம், வெறும் அஹிம்சா இயக்கமல்ல. அதை நான சீன சென்றிருந்த பொழுதுதான் நன்கு அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. சீன அறிஞர், கலைஞர், புலவரான குமோஜோ சமாதான இயக்கம்பற்றி எனக்கு சரியான விளக்கம் கொடுத்தார் சீனத் தொண்டர்கள், கொரியாவில் அமெரிக்கர் நடத்தி வரும் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த ஆயிரமாயிரமாகச் செல்கின்றனர். தலைக்கு ஒரு ரூபாய் வீதம் சீனமக்கள் உதவி, 2,000 விமானங்களை கொரியாவுக்கு அனுப்ப முன் வந்துள்ளனர். இதுதான் சமாதானத்தை நிலை நாட்டச் செய்யப்படும்

(4-ம் பக்கம் பார்க்க)

முக்கூட்டு மகாநாடாவது நடத்துக!

பம்பாய், ஆக. 30—

தொழிலாளர்களின் கோரிக்கைகளை தொழிலாளர், சர்க்கார், நிர்வாகப் பிரதிநிதிகள் கொண்ட முக்கூட்டுக் கமிட்டி கூடி விவாதிக்கவேண்டும் என்று தான் யோசனை கூறியுள்ளதாக என்ஜினீரிங் தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் கே. என். ஜோகளேகர் நிருபர்களிடம் கூறினார். இது ஒப்புக்கொள்ளப்பட்டால் மகாநாடு நடைபெற்றுமுடிந்ததும் தொழிலாளிகள் வேலைக்குச் செல்லத் தயாராயிருப்பதாக கூறினார்.

கம்பெனி நிர்வாகம் தொழிற் சங்கத்திற்கு அளித்திருந்த அங்கீகாரத்தை வேலை நிறுத்தத்தை தொடர்ந்து ரத்து செய்துவிட்டது.

எல்லையற்ற விதண்டாவாதம் செய்வதே ஏகாதிபத்ய நோக்கம்

மேற்கு நாடுகளின் போலிப் பிரேரணையை மாலிக் நிராகரித்தார்

ஐ நா. ஆக. 29—

சோவியத் ரஷ்யாவும், சீனுவும், தங்களுடைய ராணுவ வீரர்களின் எண்ணிக்கையை 15 லட்சமாகக் குறைத்துக் கொண்டால், ஐந்து வல்லரசு ஆயுதப் பரிஹார மகாநாட்டைக் கூட்டலாம் என்ற மேற்கு நாடுகளின் பிரேரணைகளை சோவியத் ரஷ்யப் பிரதிநிதி தோழர் ஜேகப் மாலிக் இன்று நிராகரித்தார்.

எல்லா வல்லரசுகளும் தங்கள் ஆயுதங்களையும், ஆயுதப் படைகளையும் மூனறில் ஒரு பங்கு குறைத்துக் கொள்ள வேண்டுமென்றும், அதே சமயம் அணுகுண்டு தடை செய்யப்பட்டு, கண்டிப்பான சர்வ தேசக் கட்டுப்பாடு செய்ய வேண்டுமென்றும் சோவியத் ரஷ்யா கொண்டுவந்த பிரேரணைகளை மேற்குநாடுகள் ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியம் என்று மாலிக் கூறினர். இப்பிரேரணைகளை உடனடியாக ஒப்புக் கொள்ளுவதின மூலமாகத் தான் சர்வதேச நெருக்கடியைத் தவிர்க்கமுடியும் என்றும் அவர் அறிவித்தார்.



விஷக்கிருமிப் போரையும், அணுகுண்டு[illegible]ம் தடை செய்யும் பி[illegible]த் தட்டிக் கழிக்கவே [illegible] நாடுகள் விரும்புகி[illegible] ஆயுதப் பரிஹார ம[illegible]ல் எத்தகைய உருவான முடிவும் ஏற்படாமல். எல்லையற்ற விதண்டாவாதம் செய்வதே மேற்கு நாடுகளின் நோக்கம். ஆயுதப் படைகள் எண்ணிக்கையைக் குறைக்கும் அதே சமயத்தில், விஷக்கிருமிப் போரையும், அணுக்குண்டுகளையும் தடை செய்ய அவை மறுக்கின்றன என்று மாலிக் குற்றம் சாட்டினர்.

சோஷலிஸ்ட் - பிரஜா இணைப்பும் ஐக்கிய ஜனநாயக முன்னணியும்

பிரஜா கட்சித் தலைவர்கள் தெளிவான அறிக்கை விட வேண்டும்

தோழர் நாகிரெட்டி அறைகூவல்

சென்னை, ஆக. 30—

சட்ட சபை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான தோழர் டி. நாகிரெட்டி எம். எல். ஏ பின் வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:—

சட்ட சபைக்குள் இயங்கி வரும் ஐக்கிய ஜனநாயக முன்னணியிடம் சோஷலிஸ்ட் பிரஜா கட்சிக்கு உள்ள கண்ணேட்டம் பற்றி பத்திரிகைகளில் மிகவும் குழப்பத்தை உண்டுபண்ணும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதன் விளைவாக மக்கள், புதிய நிலைமைகளைப் பற்றி கலக்கமடைந்திருக்கிறார்கள். திரு. தென்னேட்டி விஸ்வநாதம் போன்ற சில பிரஜா கட்சித் தலைவர்கள், ஐ. ஜ. மு வில் தற்போது உள்ள எதிர்க் கட்சிகளின ஒற்றுமை, பிரஜா கட்சித் தலைவர்களின் புதிய நடவடிக்கை காரணமாக 'எந்த வகையிலும் பாதிக்கப்பட மாட்டாது' எனக் கூறியிருக்கிறார்கள்.

ஆனால் நடைமுறையில் இது அடியோடு வேறு பட்டிருக்கிறது. சோஷலிஸ்ட் பிரஜா கட்சிகளின இணைப்பின மூலம் அவை ஒரு கட்சியாகி விட்டன. இந்தக்கட்சியின் ஒரு பகுதி ஐ. ஜ. மு. வைத் தாக்கியும் அதே கட்சியின மற்றொரு பகுதி ஐ. ஜ. மு. விலுள்ள கம்யூனிஸ்டுகளுடன சேர்ந்து வேலை செய்து வருவதும் வேடிக்கையாக இல்லையா?

பிரஜா கட்சித் தலைவரான ஆசாரியா கிருபளானியிடம் இந்தக் கேள்வி கேட்கப்பட்டபோது அவர் நேரடியாகப் பதில் கூறுமல், அந்த விஷயம் தன்னுடைய விவகாரம் அல்லவென்றும், இந்த கேள்வியைமற்ருேரிடத்தில்-அதாவது சென்னையில் உள்ளபிரஜா கட்சித் தலைவர்கள் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள் என்று பொருள்படும்படி பேசியிருக்கிறார்.

இம்மாதிரியான குழப்பம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. நெல்லூரில் ஒருபொதுக் கூட்டத்தில் திரு. பிரகாசம் பேசுகையில், சட்டசபையில் ஐ. ஜ. மு. செய்து வரும் வேலை பற்றி தனக்கு திருப்தி இல்லை என்று கூறியது நிலைமையை இன்னும் மோசமாக்கிவிட்டிருக்கிறது. ஐ. ஜ. மு. வுடன் இணைந்திருப்பது பற்றி சோஷலிஸ்டுகளாலும் பத்திரிகைகளாலும் துஷ்பிரசாரம் நடந்து கொண்டிருக்கையில் திரு பிரகாசத்தின பேச்சு குழப்பத்தை அதிகரித்திருக்கிறது.

இந்தக் குழப்பத்தை சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்களும், பிரஜா கட்சித் தலைவர்களும் நீக்குவார்களென நான் நம்புகிறேன். 'எல்லா எதிர்க்கட்சிகளும் தங்களால் முடிந்தவரை தகராறு ஏற்படுவதைத் தவிர்க்கும். இதன்மூலம் காங்கிரஸுக்கு ஒரு ஜனநாயக எதிர்ப்பாக ஒன்றுபடுவோம்! என திரு. விஸ்வநாதம் கூறுகிறார். ஆம், நம் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட குறைந்தபட்ச திட்டத்தில் ஐக்கியத்திற்கான அடிப்படை தெளிவாகவும், ஸ்தூலமாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது சோஷலிஸ்ட்-பிரஜா இணைப்பு என்பது, சோஷலிஸ்ட்கள் குறைந்தபட்ச திட்டத்தை ஏற்றுக்கொண்டு, ஐ. ஜ. மு வின் பகுதியாக சட்டசபையில் மாறி அதன்மூலம் ஐ. ஜ. முவைப் பலப்படுத்துவார்கள் என எதிர்ப்பார்க்கலாமா?

இந்தக் கேள்விக்குச் சாதகமான பதிலை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அப்படியில்லாவிட்டால், ஒரு கட்சியின் ஒரு பகுதி ஐ.ஜ.மு.வில் இருப்பதும், மற்றொரு பகுதி ஐ. ஜ. மு.வுக்கு வெளியே இருப்பதும் புதுமையாக இல்லையா?

மாஜி சோஷலிஸ்ட் கட்சியின் கம்யூனிஸ எதிர்ப்பு, எதிர்கட்சிகளின் ஒற்றுமையை, நடைமுறை உண்மைகளைக் கவனியாமல் உடைப்பதற்கு ஒரு கருவியாக அவர்களை மாற்றிவிடாது என நம்புகிறேன். இதுபோன்ற சிருஷ்டிப்பு தந்திரங்களுக்கு பிரஜாக்கட்சித் தலைவர்கள் இரையாக மாட்டார்களென நம்புகிறேன்.

★

எரிவாயு தொழிலாளர் மீது கண்ணீர்புகை

பூரண உள்ளிருப்பு வேலைநிறுத்தம்; உண்ணுவிரதம்

கோரிக்கைகளை விசாரணைக்குவிட பம்பாய் சர்க்கார் கம்பெனி மறுப்பு

பம்பாய், ஆக. 30—

பம்பாய் எரிவாயுக் கம்பெனித் தொழிலாளிகள் 1400 பேர்களும் தங்களுடைய கோரிக்கைகள் அத்தனையையும் விசாரணை நீதி மன்றத்திற்கு விட வேண்டுமென்று கோரி இன்று காலை தொழிற்சாலைக்குள் உள்ளிருப்பு வேலை நிறுதத்தம் செய்தனர். கம்பெனி நிர்வாகம் வேலை நிறுத்தத்தை தொடர்ந்து கதவடைப்பு செய்துள்ளது. போலீசார் தொழிலாளிகளை வெளியேற்ற கண்ணீர்புகை பிரயோகம் செய்துள்ளனர்.

வேலை நிறுத்தத்தின் காரணமாக எரிவாயு அழுத்தம் (பிரஷர்) மிகக் குறைந்த அளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளது. இதனுல் பம்பாயிலுள்ள 9000 எரிவாயு விளக்குகள் அணைந்து போக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எஞ்சினீரிங் தொழிலாளர் சங்கம் (செங்கொடி) நேற்று விடுத்துள்ள அழைப்பிற்கு இணங்க தொழிலாளிகள் இன்று தங்களுடைய சகல கோரிக்கைகளையும் விசாரணை நீதி மன்றத்திற்கு விடவேண்டுமென்று கோரி வேலைநிறுத்தம் செய்தனர்.

தொழிலாளிகள் காலையில் 8 மணிக்கு ஊர்வலமாக எரிவாயு தொழிற்சாலைக்குச் சென்றனர். தங்களுடைய கோரிக்கைகளை நிர்வாகியின் முன் வைத்தனர். நிர்வாகி அவர்களுடைய கோரிக்கைகளை நிராகரித்தார். அதைத் தொடர்ந்து தொழிலாளிகள் தொழிற்சாலைக்குள் சென்று உள்ளிருப்பு வேலை நிறுத்தம செய்தனர்.

நிர்வாகம் வேலை நிறுத்தத்தை சட்டவிரோதம் என்று பட்டம் சூட்டிவிட்டு, கம்பெ[illegible]யை கதவடைப்பு செய்து[illegible]தாக மத்தியானம் 1 மணி[illegible] அறிவித்தது.

ஆயுதம் தாங்கிய போலீசார் எரிவாயு தொழிற்[illegible]லைக்கு வெளியில் காவல் [illegible]க்கப் பட்டுள்ளனர்.

சங்கத் தலைவர் தோழர் கே. என். ஜோக்ளேகர், கம்பெனி தொழிலாளிகளின் 31 கோரிக்கைகளையும் விசாரணை நீதி மன்றத்திற்கு விட இசைந்தால் தொழிலாளிகள் விசாரணை நீதி மன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளத் தயார் என்றார்.

சங்கச் செயலாளர் தோழர் அம்பிகா ஜோக்லேகர் (ஜோக்லேகர் மனைவி) தொழிற்சாலைக்கு முன்னுல் வேலை நிறுத்தம் ஆரம்பித்த நேரத்திலிருந்து உண்ணுவிரதமிருந்து வருகிறார். அவர் கோரிக்கைகள் வழங்கப்படாவிட்டால் சாகும் வ[illegible] உண்ணுவி[illegible] போவதாக [illegible]

தொழில[illegible] காரமாக [illegible] ருந்து [illegible] டால் [illegible] சா[illegible] [illegible]

இந்த நிலைமையில் பம்பாய் ராஜ்ய தொழிலாளர் மந்திரி திரு ஷாந்திலால் ஷா நிருபர்களிடம் "சர்க்கார் எரிவாயு கம்பெனிக்கு சகல உதவியையும் செய்யும்" என்று கூறினர்.

கருங்காலிகள் வேலை தேடித் தருவோர் சங்கத்தின் மூலமாகத் தருவித்து வேலையை துவக்க முயற்சி செய்யப்படும் என்றும் வேலை நிறுத்தம் சட்ட விரோதம் என்றும் ஆணவமாகப் பேசினர்.

விசாரணை நீதிமன்றத்திற்கு விடாத 13 கோரிக்கைகள் தகராறுக்கு உரியவையல்ல என்றார்.

தோழர் கே. என். ஜோக்ளேகர் பின்னர் விடுத்துள்ள அறிக்கையில், தொழிலாளர் க[illegible] சமாதான[illegible]மாக இருப்பார் [illegible] கோரிக்கைகள் [illegible] சத்தியாக் [illegible]ர் என்றும் கூறி [illegible] தொழிற்சாலைக்குள் அமைதியாக உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளிகளை [illegible] வெளியே [illegible] [illegible] கண்டித்து[illegible] [illegible]ர்க்கார், சம் [illegible] நடந்து [illegible] [illegible]பற்ற, அயோ[illegible] [illegible] போக்கின [illegible]லுள்ள ஆள் [illegible]ச்சி சாலை [illegible] [illegible]லயங்[illegible]

ட்ரூமன், சர்ச்சில் முகத்தில் கரி

அமெரிக்க பிரிட்டிஷ் பிரேரணைக்கு ஈரான் நிராகரிப்பு

எண்ணை நெருக்கடி [illegible]கிறது

[illegible] ஆக. 30

ஈரானிய எண்ணைத் தகரா[illegible]றத் [illegible] ரிக்க ஜனதிபதி ட்ரூமனும், பிரிட்டி[illegible] சர்ச்சிலும கூட்டாக அனுப்பிய பிரேர[illegible] ஈரானியப் பிரதமர் முஸ்ஸா தேக் நிராகரித்த[illegible] [illegible] ஈரானிய விவகாரம் மிகவும் முற்றி நெருக்கடி[illegible]தை எட்டிவிட்டது.

ஆங்கிலோ-அமெரிக்க கூட்டு பிரேரணைகளை ஈரானிய மந்திரி சபையும், பார்லிமெண்ட் எ[illegible]ணைக் கமிஷனும் பரி[illegible] [illegible]னர் உத[illegible] [illegible] என்று [illegible] [illegible] கூறியது [illegible]மயன்று [illegible]

[illegible]ரான் வந்து சேரும்படி ரேடியோ மூலம் தாக்கீது அனுப்பப்பட்டது.

சர்ச்சில்-ட்ரூமன் பிரேரணை

சர்ச்சிலும், ட்ரூமனும் கூட்டாகக் கையெழுத்திட்டு [illegible] போலிப் பிரேரணை [illegible]று:—

[illegible] கிலோ ஈரானிய எண் [illegible] கம்பெனிக்கு ஈரான தர [illegible] நஷ்டஈட்டுப் பிரச் [illegible]றத்திலுள்ள சர்வ [illegible]ர்ட்டின பரிசீல [illegible] வேண்டும்.

[illegible]னிலிருந்து உலக [illegible]டுகளுக்கு எண்ணை [illegible]டுகளை [illegible]

எகிப்திய நிலச்சீர்திருத்த மசோதா

மடாலய நிலங்களுக்கும், அன்னியர் நிலங்களுக்கும் விதிவிலக்கு!

கெய்ரோ, ஆக 30—

சமூக விவகார மந்திரி ஜோஹேர் காராணு தலைமையில் நிறுவப்பட்டுள்ள சுப்ரீம கமிட்டியினுல் தீவிரமான எகிப்திய நிலச் சீர்திருத்தங்கள் அமுல் நடத்தப்படும். இதற்கான மசோதாவை சுப்ரீம் கோர்ட் அங்கீகரித்துவிட்டது.

ராணுவ தளபதி நகீபினுல் ஒரு மாதத்திற்கு முன்னர் அறிவிக்கப்பட்ட இந்த நிலச்சீர்திருத்தங்களின மீது எகிப்து முழுவதிலும் காரசாரமான விவாதம் நடைபெற்றது.

200 ஏக்கர்களுக்கு மேல் சொந்தமாகப் பெற்றுள்ள நிலப் பிரபுக்களின் நிலங்களை சர்க்கார் நஷ்டஈடு கொடுத்து விலைக்கு வாங்கி, நிலமில்லாத விவசாயிகளுக்கு விற்பனை செய்யும்.

நிலச் சீர்திரு[illegible]தம் அமுல் நடத்தும் சுப்[illegible] கமிட்டியில் விவசாய, [illegible]பொருளாதார, சமூக, அறிவி[illegible]ல், கூட்டுறவு இயக்க நிபுணர்[illegible]ள் பலர் அங்கம் வகிக்கிற[illegible]ர். சுமார் 10 லட்சம் ஏக்கர் [illegible]ளமான பூமி நிலமற்ரோரு[illegible] பகிர்ந்து [illegible]கொடுக்கப்[illegible]

நில வரியைப் போல பத்து மடங்கு தொகை, நிலப்பிரபுக்களின் நிலங்களுக்கு நஷ்டஈடாக கொடுக்கப்படும். இப்பணம் மூன்று சதவிகித வட்டியுடன், 30 வருஷ தவணையில் செலுத்தப்படும்.

அன்னியர் நிலங்களுக்கு விதிவிலக்கு!

பாலை நிலத்தைப் பண்ணை நிலமாகத் திருத்திப் பயிர் செய்யும் கம்பெனிகளுக்குச் சொந்தமான நிலத்தை சர்க்கார் எடுத்துக் கொள்ளவில்லை. அநேகமாக இந்த நிலமெல்லாம் அன்னியர்களுக்கு சொந்தமானது. எகிப்தில் மொத்தம் 5 லட்சம் ஏக்கர் வளமான பூமி அன்னியர் வசமுள்ளது.

மடாலய நிலங்களையும் நிலச் சீர்திருத்தம் பாதிக்காது.

சோஷலிஸ்ட்-பிரஜா இணைப்பு சீர்குலைவு சக்திகளை பலப்படுத்தக்கூடாது

ஏ. கே. கோபாலன் அறிக்கை

கோழிக்கோடு ஆக. 30—

நாட்டின் நலனை உத்தேசித்து எல்லா எதிர்க் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் கம்யூனிஸ்ட் கட்சியை ஒதுக்குவதென்பது ஜனநாயக சக்திகளைப் பிளவுபடுத்தும். பிரஜா-சோஷலிஸ்ட் இணைப்பு சீர்குலைவு சக்திகளை வளர்ப்பதாக இருக்கக்கூடாது என பார்லிமெண்டு எதிர்க்கட்சி தலைவர் தோழர் ஏ. கே. கோபாலன் இன்று அறிக்கையில் கூறியிருக்கிறார்.

ஐக்ய முன்னணிக்கு நாட்டில் ஏற்பட்ட வெற்றிகளைக் கண்டு பயமடைந்த காங்கிரஸ்காரர்கள், சில இடங்களில் முஸ்லிம் லீகுடனும், வேறு சில இடங்களில் இதர பல பிற்போக்காளர்களுடன கூட்டனி வகுத்துக்கொள்ள முன் வந்திருப்பதாக தோழர் கோபாலன் கூறினர்.

[illegible]சு மலான் [illegible]

[illegible]கண்டனம்

[illegible] ஆக. 31—

"[illegible]ன ஆப்பிரிக்க வாரிசுகள் [illegible] ஆட்சி உள்ள எல்லாருடைய வெறுப்பை[illegible]யும் சம்பாதிக்கிறார்கள்" என மாஸ்கோ தினசரியான 'இஸ்வெஸ்தியா' ஒரு "சர்வதேச தலையங்கம்" கூறியிருக்கிறது.

மலான் சர்க்கார் 1 கோடி ஆப்பிரிக்கர், இந்தியரை கொடுமையாகத் துன்புறுத்தி வருவதாக அக்கட்டுரை குற்றம் சாட்டி இருக்கிறது.

"நிறவெறிச் சட்டங்கள், நீக்ரோக்களையும், இந்தியர்களையும் அடிமைகளின் நிலைக்குத் தள்ளுவதற்காக ஒன்றன் பின் ஒன்ருக கொண்டு வரப்படுகின்றன. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அடக்குவதின் மூலம் மலான் அரசாங்கம் ஒரு பாஸிஸப் பயாட்சியை ஆரம்பித்திருக்கிறது. ஜனநாயக ஸ்தாபனங்களின் காரியாலயங்க[illegible]க் தாக்கி, [illegible] அரசியல் [illegible]களைக் [illegible]கது செய்து, [illegible] நாட[illegible] நடத்தி[illegible] [illegible]தும். அல்[illegible] ஜெயில் [illegible] அளிக[illegible] [illegible] அக்கட்டு[illegible] [illegible]

சென்னை ஐ. ஜ. மு. எவ்விதத்திலும் பாதகமடையாது

பிரஜா கட்சித் தலைவர் டி. விஸ்வநாதம் அறிக்கை

சென்னை, ஆக. 30—

"சோஷலிஸ்ட்—பிரஜா கட்சிகள் ஒன்ருக இணைவதினுல், சென்னை சட்டசபையில் எதிர்க்கட்சிகளெல்லாம் ஒன்று சேர்ந்து ஏற்கனவே அமைத்துள்ள ஐக்கிய ஜனநாயக முன்னணி எவ்விதத்திலும் பாதகமடையாது", என்று பிரஜா கட்சித் தலைவரும், சென்னை சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவராகவுமுள்ள திரு. தென்னேட்டி விஸ்வநாதம் நேற்று ஒரு பேட்டியின்போது கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: நாங்கள் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இல்லாவிட்டாலும், காங்கிரசுக்கு எதிராக உள்ள எல்லாக் கட்சிகளும் முடிந்தவரை தங்களுக்குள் முரணபாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முயற்சி செய்யும்.

அதன் மூலமாகத்தான் எல்லா ஜனநா[illegible]க் கட்சிகளின [illegible] [illegible]திர்ப்பை [illegible] முடியும்"

[illegible]னிஸ்டுகளுடன் உறவு கொள்வதில்லை என்பது பிரஜா சோஷலிஸ்ட் இணைப்புக்கு ஒரு நிபந்தனையாக இருக்கிறதே என்பதை ஒரு நிருபர் எடுத்துக்காட்டியபோது, திரு. விஸ்வநாதம், "இவ்விரு கட்சிகளின் இணைப்புக்கு முன் நடந்த பேச்சுவார்த்தைகளில் சென்னை சட்டசபையிலுள்ள எதிர்கட்சிகளின் கூட்டுறவை பற்றி யோசிக்கப்பட்டதென்றும், அந்த ஒப்பந்தத்தில் இதுபற்றி பிரத்தியேகமாக ஒரு விதி இருக்கிறதென்றும் கூறினர்.

"அபிப்பிராயம் வெளியிடும் சுதந்திரம் நமது பிறப்புரிமை. அரசியல் சட்டத்தின் மூலம் அது பரிபூரணமாக உத்தரவாதம் செய்யப்பட்டாலொழிய நாம் ஓய்ந்திருக்கமாட்டோம்."

ஜனசக்தி

ஞாயிற்றுக்கிழமை 31-8-'52

அமெரிக்கச் சதி

"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சென்ற பின் அது இருந்த இடத்தில் ஏற்பட்டிருக்கும் ஸ்திரமையற்ற ஆட்சிக்குப் பதிலாக அமெரிக்க நிதி ஏகாதிபத்தியம் நுழைந்து கொள்ள உதவும் ஒரு வழிதான் இந்த கிராம அபிவிருத்தித் திட்டம்."

"கொரியாவிலிருந்து மேற்கு ஜெர்மனி வரை ரஷ்யாவைச் சுற்றி வளைக்கச் செய்யும் அமெரிக்கச் சதியின் ஒரு பகுதியே இது. இந்தியாவையும், கொரியா யுத்தத்தில் இழுத்துச் சென்று அமெரிக்க யுத்த அணியில் இந்தியாவைச் சிக்க வைக்கும் ஆபத்து ஏற்பட்டுவிட்டது."

"எனவே இத்திட்டத்துடன் ஒத்துழைப்பவர்கள் தேசத் துரோகிகள், குவிஸ்லிங்குகள், நம் தேசத்தின் அழிவிற்கே வேலை செய்பவர்கள்" என்று காந்தீய பொருளாதார வாதி ஜே. ஸி. குமரப்பா ஒளிவு மறைவின்றி தயவு தாட்சண்யமின்றி கிராம அபிவிருத்தித் திட்டத்தைப் பற்றி எச்சரித்துவிட்டார். நம் தேச சுதந்திரத்தில் அக்கறை கொண்ட சகல மக்களும் இந்த அப்பட்டமான உண்மையை வரவேற்பர் என்பதில் சந்தேகமில்லை.

சமூக அபிவிருத்தித் திட்டத்தைக் காட்டி அவசர அவசியமான நிலச் சீர்திருத்தத்தை காங்கிரஸ் சர்க்கார் கொண்டுவர மறுப்பதை டாக்டர் குமரப்பா குறிப்பிடுவதின் மூலம் ஆட்சியின் ஜனவிரோதப் போக்கு ஒளிவு மறைவின்றி அம்பலப்படுத்துகிறது.

இந்தியாவெங்கும் 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட கிராமங்களில் அமெரிக்க கிராம அபிவிருத்தித் திட்டம் அமுலுக்கு வரப்போகின்றது. இதற்குச் சிலவாகும் தொகையில் ரூபாய்க்கு இரண்டணாவை அமெரிக்கர்கள் கொடுப்பர். இந்த நிர்வாகிக்கும் டைரக்டர் அமெரிக்காவால் நியமிக்கப்படுவார். இந்தத் திட்டத்தை அமுலாக்க ஆயிரக் கணக்கான அமெரிக்கர் இங்குக் குடியேறுவர். இந்நாட்டின் எந்தச் சட்டமும் அவர்களிடம் நெருங்க முடியாது. இந்தக் கிராமங்களில் இந்த அமெரிக்க 'நிபுணர்கள்' என்ன செய்தாலும் காங்கிரஸ் ஆட்சிக்கு ஏன் என்று கேட்பதற்கு அதிகாரமில்லை. இவைதான் நம் 'தேசபக்த' நேருவால் அமெரிக்காவுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்த விதிகள். காங்கிரஸ் ஆட்சியாளர் நம் நாட்டைப் பிறருக்கு அடகு வைக்கும் சதிக்கு உடந்தையாக விரும்பாத ஒரு காந்தீய வாதியும் கண்ணியமான மனிதருமான குமரப்பா 'இத்திட்டம் அன்னியருக்கு நம் நாட்டில் தளங்களை உண்டாக்கிக் கொடுக்கிறது' என்று கண்டனக் குரலை எழுப்பியுள்ளது, நேர்மையும் நீதியும் தேச பக்தியும் உடைய ஒவ்வொருவரின் உள்ளக் கிடக்கையின் பிரதிபலிப்பே.

குமரப்பாவின் கண்டனம் அவசரப்பட்டதென்கிறார் இந்த அமெரிக்க அபிவிருத்தித் திட்டத்தின் டைரெக்டரான எஸ். கே. டே. ஆனால் குமரப்பா வெளியிட்டுள்ள குற்றச்சாட்டை மறுக்கவோ அல்லது தகுந்த பதிலளிக்கவோ எஸ். கே. டேயும், நேரு சர்க்காரும் முன் வர முடியாதது குறிப்பிடப்பட வேண்டிய விஷயம்.

கொரியாவைப்போல், மேற்கு ஜெர்மனியைப்போல் இந்தியாவிலும் பல அமெரிக்க தளங்களை ஏற்படுத்த அமெரிக்கா செய்யும் முயற்சி ஆட்சியாளருக்கு நன்கு தெரியும். தெரிந்திருந்தும் அமெரிக்க நிபுணர்களின் வகையாக ஆதிக்கத்திற்கு இந்திய மண்ணில் 15 ஆயிரம் கிராமங்களை விடுவதின் அர்த்தமென்ன? சோவியத்தைச் சுற்றி அமெரிக்கத் தளங்களையேற்படுத்தும் சதிக்கு இந்திய சர்க்கார் உடந்தை என்பதைத் தவிர வேறென்ன? தேச பக்தர் குமரப்பாவின் இந்தக் குற்றச்சாட்டிற்கு தகுந்த பதிலளிக்க முடியாததின் காரணமும் அதுவே. அமெரிக்கச் சதித் திட்டங்களுக்கு 'நடு நிலைமை' என்று சொல்லிக் கொள்ளும் நேரு ஆட்சி உடந்தையாக இருக்கிறது. சமூக அபிவிருத்தித் திட்டம் அமெரிக்க ஆதிக்கத்தை இந்தியாவில் விருத்தி செய்யும் திட்டமே ஒழிய வேறில்லை.

சண்டமாருதத் தேர்தல் பிரசாரம் நடக்கும் அமெரிக்காவில், சீனாவை இழந்தது போல் இந்தியாவை இழந்துவிடக் கூடாது, அமெரிக்க உதவி இந்தியாவிற்கு கிடைப்பதில் தங்குதடை, தாமதம் ஏற்படக் கூடாது என்று ஜனநாயகக் கட்சி அபேட்சகர் ஸ்டீவன்சன் கூறிவருவது வெறும் தேர்தல் பிரசாரமில்லை. அது அமெரிக்க ஏகாதிபத்தியக் கொள்கை. சமூக அபிவிருத்தித் திட்டமாக அது முன்வருகிறது. இந்தியாவை அமெரிக்கா "இழக்காமலிருக்க" கொண்டுவரப்படும் சதித்திட்டமே அது.

சுதந்திரத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும், சுபிட்ச வாழ்விற்காகவும் போராடும் இந்திய மக்களின் இதய ஒலி தான் தேச பக்தர் குமரப்பாவின் கண்டனம்.

நீசச் செயல்

சமாதானமென்பது அமெரிக்கக் கொலைகார ஆக்கிரமிப்பாளருக்கு விஷம்போலுள்ளது. அதனாலேயே கொரிய சமாதானப் பேச்சுவார்த்தையைக் குலைக்க முடியாமல் இன்று கொரியாவில் பேய் தாண்டவம் புரிகின்றனர்.

குழந்தைகள், வயோதிகர்கள், சமாதானமாக வாழவிரும்பும் நிரபராதி மக்கள் — அனைவரையும் கொன்றுகுவிக்கும் நீசத் தொழிலில் இறங்கிவிட்டனர்.

நேற்று முன்தினம் ஒரே நாளில் வடகொரியாவின் தலைநகரான பியாங்யாங்கில் ஆயிரத்திநூறு தடவை குண்டு வீசினர். தொழிற்சாலைகள், ரயில்வே நிலையங்கள், சாதாரண மக்கள் வாழும் வீடுகள், உணவுப் பயிருள்ள நிலங்கள் அனைத்தையும் [illegible] அமெரிக்க [illegible] ராணுவ [illegible] மக்களுக்கு [illegible].

[illegible] நகர் [illegible] வீடு [illegible] வானம் [illegible] பூராவையும் [illegible].

இந்தக் கொலை வெறிச் செயலைக் கேட்டுக் கொதிப்படையாதவர் யாரிருக்க முடியும்? யாலுவின் மீது குண்டு வீசியதை எதிர்த்த நேரு ஆட்சி நிரபராதி மக்களைக் கொலை செய்வதை பார்த்துக் கொண்டு மௌனம் சாதிக்கிறது. நடு நிலைமைக் கொள்கை என்பது இது தானா?

இதே அமெரிக்கக் கொலைவெறி ஆக்கிரமிப்புக் கூட்டத்திற்குத் தான இன்று நேரு ஆட்சி நம் நாட்டிற்குள் ஆதிபத்திய உரிமை அளித்து வருகிறது.

சமாதான ஆர்வமிருந்த இந்திய மக்கள், அமெரிக்க வெறியர்களின் செய்கையை எதிர்த்து பலத்த கண்டனத்தை நாடெங்கும் எழுப்ப வேண்டும்.

சென்னை, மத்திய அரசாங்கங்களுக்கு தமிழ் நாட்டிலுள்ள சகல பகுதி மக்களும் கண்டனத் தீர்மானங்களும், தந்திகளும், சென்று குவியும்படி செய்யவேண்டும். வாய மூடி மௌனம் சாதிக்கும் காங்கிரஸ் ஆட்சி அமெரிக்கரின் கொலைகாரக் குண்டு வீச்சைத் தடுத்து கொரிய மக்களு[illegible] சமாதானம் [illegible] செய்யும்படி நிர்ப்பந்திக்க முன்வரும்படி [illegible] அமெரிக்கரின் நீசச்செயலை வெறுக்கும் [illegible] தவிர்க்க முடியாத உடனடிக் கடமை இது.

மிளகாய் வத்தல் வியாபாரம்

"வங்காள பீகார் வத்தல்" என்கிற மோசடி

ஏற்றுமதி ஏற்பாடு சீர்படவேண்டும்

சென்னை, ஆக. 31— சென்னை ராஜ்யத்திலிருந்து வெளிதேசங்களுக்கு ஒவ்வொரு மூன்று மாத காலத்துக்கும் 500 டன் மிளகாய் வத்தல் ஏற்றுமதி செய்து கொள்ளலாம் என்று சென்னை ராஜ்யத்தின் கொள்கை.

அதிகப்படியாக ஏற்றுமதியானால் ராஜ்யத்தில் மிளகாய் வத்தல் விலை உயர்ந்து விடும் என்ற காரணத்தினாலும், ராஜ்ய மக்கள் எல்லோருக்கும் போதிய அளவு மலிவு விலையில் கிடைக்கும்பொருட்டும், நமது ராஜ்யத்தின் மொத்த உற்பத்தியில் ராஜ்யத்தின் தேவை போக 500 டன்தான் மிஞ்சுமென்று நிர்ணயித்திருக்கிறது அரசாங்கம்.

அதே சமயத்தில் வங்காள ராஜ்யத்திலிருந்து 1500 டன் மிளகாய் வத்தல்களை வெளிதேசங்களுக்கு ஒவ்வொரு மூன்று மாத காலத்துக்கு ஏற்றுமதி செய்துகொள்ளலாம் என்று இந்திய அரசாங்க வியாபார இலாகா, நிர்ணயித்திருக்கிறது. ஆனால், வங்காள ராஜ்யத்தில் பெருவாரியாக மிளகாய் வத்தல் உற்பத்தி செய்யப்பட்டு வந்த பகுதியான மேற்கு வங்காளம் பிரிவினைக்குப் பின்னால் பாகிஸ்தான் ராஜ்யத்தைச் சேர்ந்து விட்டது.

ஆகவே இழக்கு வங்காளத்தில் உற்பத்தியாகும் மிளகாய் வத்தல் அந்த ராஜ்ய மக்களுக்கு மட்டுமே போதிய அளவு இருக்கக்கூடும். ஆனால் அந்த ராஜ்யத்திலிருந்து ஏற்றுமதி செய்ய கூடிய அளவிற்கு உற்பத்திப் பெருக்கு இல்லை என்பது அடியில் காணும் விபரங்களிலிருந்து தெரியக்கூடும்.

அதாவது வங்காள ராஜ்ய துறைமுக மூலமாக ஏற்றுமதி செய்து வந்த ஏற்றுமதி வியாபாரிகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு கோட்டா கொடுத்தவுடன், நமது ராஜ்யத்திற்கு வந்து, கொள்முதல் செய்து, வெளிதேசங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.

எப்படி யென்றால், கல்கத்தா நகரம், காலரா பிரதேசம் என்று இலங்கை அரசாங்கம் சென்ற இரு ஆண்டுகளாக நிர்ணயித்திருக்கிறது.

ஆகையால் வங்காள துறைமுகத்திலிருந்து எந்த சரக்கும் இலங்கைக்கு வரக்கூடாதென்று தடையும் செய்திருக்கிறது. இதற்காக வங்காள ஏற்றுமதியாளர்கள் தமிழ் நாட்டிலிருந்து கொள்முதல் செய்து ரயில் மார்க்கமாகவும் கப்பல் மார்க்கமாகவும் வங்காள ராஜ்யத்திற்கு கொண்டு போய், மறுபடியும், டி ராஜ்யங்களிலுள்ள ஏதாவது ஒரு ரயில்வே ஸ்டேஷனில் (தமிழ் நாட்டிலிருந்து வங்காள ராஜ்யத்திற்கு கொண்டு போன மிளகாய் வத்தலை) சென்னை ராஜ்ய துறைமுகங்களான விசாகபட்டணத்திற்கும், தூத்துக்குடிக்கும், அனுப்பி வைத்து டி துறைமுகங்களிலிருந்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஆகவே நம் நாட்டிலிருந்து வங்காளத்துக்கு மிளகாய் வத்தல் போவதால், வங்காள ராஜ்யத்தில் ஏற்றுமதிக்குத் தகுந்த உபரி உற்பத்தி இல்லை என்பது தெளிவாகிறதல்லவா?

ஆகவே, எந்த நோக்கத்திற்காக சென்னை ராஜ்ய அரசாங்கம், அதிகப்படியாக நம ராஜ்யங்களிலிருந்து வெளி தேசங்களுக்கு வரம்பின்றி ஏற்றுமதியாகக் கூடாது என்று கொள்கை வகுத்ததோ அது நிறைவேறாமல் போகிறது.

வங்காள ஏற்றுமதியாளர்கள் தமிழ் நாட்டில் வந்து கொள்முதல் செய்யும் சமயத்தில் 80 ராத்தல் கொண்ட மணங்கு 1-க்கு குறைந்தது 10 ரூ. விலை அதிகமாகிறது. உதாரணமாக சென்ற மாதம், மணங்கு 1-க்கு 35 ரூபாயாக இருந்த மிளகாய் வத்தல் இப்போது 47 ரூபாயாக இருக்கிறது. இதன் காரணமாக, உபயோகத்திற்காக விலைக்கு வாங்கும் காலங்களில், வாழ்க்கைக்கு சாதாரண மக்கள் கூடுதல் விலை கொடுத்து வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அதன் நிமித்தம் அவர்களுடைய வாழ்க்கைச் செலவும் உயருகிறது.

வாழ்க்கைத்தர உயர்வால் பொதுமக்கள் அவதிப்படுவதை அரசாங்கத்திற்குத் தெரிந்தும், தெரியாததுபோல் நடந்துவருவது மிகவும் கண்டிக்கத்தக்க விஷயம்.

ஆகையால் நமது ராஜ்யத்திலிருந்து வங்காள ராஜ்யம் சென்று திரும்பி நமது ராஜ்யம் வந்து, "வங்காள, பீகார் ராஜ்ய மிளகாய் வத்தல்" என்றபோல் ஏற்றுமதி செய்யப்படும் பித்தலாட்டத்தை, சென்னை அரசாங்கம், மத்திய அரசாங்க வியாபார இலாகாவுக்கு உடனடியாகத் தெரியப்படுத்த வேண்டும்.

இதே போக்கில் போய்க் கொண்டே இருந்தால், இந்த ராஜ்யத்திலுள்ள, ஏற்றுமதியாளர்களையும், மக்களையும் பாதிக்கும் என்பதை அரசாங்கம் அறிந்து வங்காளத்துக்கு செல்லும் மிளகாய் வத்தலை தடை செய்ய வேண்டும்.

(ந. வி. கி

தேசிய கூலி போர்டு அமை!

குருசாமி கோரிக்கை

லக்ஷ்மணபுரி ஆக. 30— தற்பொழுது மத்திய சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளம், பஞ்சப்படியில் நிலவிவரும் குறைபாடுகளை தடுக்க பஞ்சப்படியையும், கூலியையும் அப்போதைக்கப்போது ஒரேமாதிரியாக நிர்ணயிக்க சர்க்கார் தேசிய கூலி போர்டு ஒன்றை அமைக்க வேண்டுமென்று அகில இந்திய ரயில்வேத் தொழிலாளர் சம்மேளனப் பொதுச் செயலாளர் தோழர் எஸ். குருசாமி கூறினர். அப்படியானால்தான் மத்திய சர்க்கார் சிப்பந்திகளின் "தீராத" குறைகளை தீர்க்க முடியும், தொழிற் தகராறுகளை போக்க முடியும் என்றார்.

மத்திய சர்க்கார் சிப்பந்திகள் சங்கத்தின் கூட்டத்தின் பேசுகையில் தோழர் எஸ். குருசாமி நன்னடைத்தைபடி என்று சில சிப்பந்திகளுக்கு கொடுக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்றார்.

நில வெளியேற்றங்களுக்கு மந்திரி கண்டனம்

கோழிக்கோடு ஆக. 30— விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றும் நிலப் பிரபுக்களின் செய்கைகளை கண்டித்து சென்னை சட்ட மந்திரி கே. பி. குட்டிகிருஷ்ண நாயர் இங்கு நடைபெற்ற தொழிலாளர் கூட்டத்தில் பேசினர்.

மலபாரில் உணவு உற்பத்தியைப் பெருக்க பத்து சிறிய நீர்ப்பாசன திட்டங்களை சர்க்கார் அமுல் நடத்தும் என்றும் அவர் கூறினர்.

சமாதான இயக்கம் மக்கள்....

(முதற் பக்கத் தொடர்ச்சி

பணி என நான் கருதுகிறேன்.

ஜலந்தரில் அகில இந்திய சமாதான மகாநாட்டிற்கு ஆக்கமளிக்கும் முறையில் சென்னை மகாநாடு நிச்சயம் வழிகாட்டுமென்று நான் திடமாக நம்புகிறேன். ஏனென்றால் தேர்தலில் ஜனநாயக முன்னணிக்கு வெற்றியளித்தார்கள் தென்னிந்திய மக்கள்.

கொரியாவில் நடக்கும் கொடுமைகளை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஒரு கொரிய கிராமத்தில் ஒரு கிழவி தவிர மற்ற எல்லாம் நிர்மூலமாக்கப்பட்டன. ஆனால் வட கொரியா தான் ஆக்கிரமிப்பாளன் என்ற ஐ. நா. தஸ்தாவேஜில் இந்தியாவின் கையெழுத்தும் இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. நேரு போட்ட அந்தக் கையெழுத்தில் நமக்கும் பங்குண்டு. இந்திய வைத்திய கோஷ்டிப் படை தென் கொரியாவின் பக்கம் நிற்கிறது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

ஜனநாயக, சட்டபூர்வமான சகல வழிகளாலும் இந்த நாட்டுமக்கள் இந்திய சர்க்கார் கையை நிர்ப்பந்தித்தாக வேண்டும்.

அமெரிக்க-ஜப்பான் உடன் படிக்கையில் இந்திய சர்க்கார் கலந்து கொள்ளவில்லையாயினும், அதன் அபாயத்தை நாம உணராமலிருக்க முடியாது. நேருவால் அனுப்பப்பட்ட டாக்டர் குமரப்பா ஜப்பானுக்கு விஜயம் செய்திருந்த பொழுது, ஜப்பானிய டிரைவர் ஓட்டும் டாக்ஸியில் ஏற முடியவில்லை; நல்ல ஜப்பானிய ஹோட்டல்களில் தங்க முடியவில்லை. அதுதான் இன்று ஜப்பான், அமெரிக்காவின் அடிமையாய் வீழ்ந்து கிடக்கும் பரிதாப நிலை.

கொலைகார டெம்ப்ளர்

கடந்த 4 வருடங்களாக மலேயாவில் டெம்பளர் நடத்தி வரும் கொடுமைகள் கொஞ்சமல்ல. 4 நாள் தவணை கொடுத்து, 69 கிராமவாசிகளை ஒரு கிராமத்திலிருந்து காவல் முகாமுக்குக் கொண்டுபோய் அடைத்து அந்த கிராமத்தை நிர்மூலமாக்கிவிட்டான். ஆனால் அங்குள்ள தேசபக்த வீரர்களிடம் நேரு அஹிம்சை போதிக்கிறார். ஆனால் டெம்ப்ளருக்கு அவர் அஹிம்சை போதிக்கவில்லை.

சமாதான இயக்கம் என்பது ஐக்கிய மக்கள் இயக்கமாகும். ஆசிய மண்ணில் மக்கள் [illegible] தம் ஓட்டம் அனுமதி[illegible]. யுத்தத்தின் மூலம் [illegible] பாதிக்கும்படி விடமாட்டோம்.

நம் நாட்டில் உணவுப் பிரச்சினை மோசமாகிவிட்டது; பஞ்சம் பரவிவருகிறது. ரூபாய்க்கு 7 அணா ராணுவச் செலவு செய்யப்படுகிறது. இந்திய கிராமங்களை சீர்திருத்த அமெரிக்க நிபுணர்களை சர்க்கார் வரவழைப்பதைக் காணும் டாக்டர் குமரப்பாவுக்கு பயித்தியம் பிடித்துவிடும்போலிருக்கிறது. ஆனால் அதிர்ஷ்டவசமாக மக்கள் ஆங்கிலோ-அமெரிக்கர்கள் பக்கம் இல்லை.

குமரப்பா கூறியது

பீகிங்கில் நடக்கவிருக்கும் ஆசிய சமாதான மகாநாடு, இந்தியாவில் நடந்திருக்க வேண்டும். சகல நாடுகளும் இதை விரும்பின. ஆனால் அப்பொழுது ராஜாஜி கவர்னர் ஜெனரல், தடுப்புக்காவல் சட்ட அமுல் இருந்தபடியால், இந்தியாவில் கூடுவது சாத்தியமாகவில்லை.

பீகிங் செல்லும் பிரதிநி[illegible]களுக்கு உங்கள் [illegible] ஆவலையும் உ[illegible] தெளிவாக அ[illegible] அனுப்புங்கள். இ[illegible] நான் முயற்சிக்கு நே[illegible] [illegible]ர் ராதாகிருஷ்ணன் மேற்[illegible] காள்ளும் நடவடிக்கைகளுக்கு [illegible]. இந்[illegible] சமாதான இ[illegible] [illegible]வுதர வேண்[illegible]டுக்கு அறிவிக்[illegible]றியில் டாக்டர் குமர[illegible] [illegible] வெ[illegible]

ட்ரூமன் சர்ச்சில் முகத்தில்....

அமெரிக்க ஏமாற்றம்

வாஷிங்டன், ஆக. 30— சர்ச்சில்-ட்ரூமன் கூட்டுப் பிரேரணைகளை முஸ்ஸாதேக் நிராகரித்து விட்டது கண்டு "தான் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளதாக" அமெரிக்க சர்க்கார் இன்று அறிவித்தது.

(முதற் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொண்டால், ஏற்கெனவே விற்பனையின்றி ஈரானில் குவிந்துகிடக்கும் எண்ணெயை உடனடியாக விற்பனை செய்ய எண்ணெக் கம்பெனி தக்க நடவடிக்கை எடுக்கும். ஈரான் மேலுள்ள கட்டுப்பாடுகளை பிரிட்டன் தளர்த்தும். ஈரானின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க அமெரிக்கா உடனடியாக ஒரு கோடி டாலர் கொடுத்துதவும்.

புதன் கிழமையன்று முஸ்ஸாதேக்கை சந்தித்த அமெரிக்க, பிரிட்டிஷ் ஸ்தானிகர்களின் சிபார்சின் பேரிலேயே ட்ரூமனும் சர்ச்சிலும் இந்தப் பிரேரணைகளை வெளியிட்டனராம். பிரேரணையை முஸ்ஸாதேக் ஒப்புக் கொள்ளலாம் என்று அவர்கள் தெரிவித்தனராம். ஆனால் நேற்று நடைபெற்ற பிரம்மாண்டமான அமெரிக்க, பிரிட்டிஷ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் விளைவாக முஸ்ஸாதேக் தன் கருத்தை மாற்றிக் கொண்டிருக்கலாம் என்று தெரிகிறது.

எண்ணெ வயலில் நாச வேலை?

இரேஞ் மௌத்திலுள்ள ஆங்கிலோ ஈரானிய எண்ணெ சுத்திகரிப்பு நிலையத்தில் இன்று ஒரு வெடி விபத்து ஏற்பட்டது. 6 தொழிலாளர்கள் தீப்புண் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர், சேதம் அதிகம் ஏற்படுவதற்குள் நெருப்பு அணைக்கப்பட்டது.

வெடி விபத்தின் காரணம் நாச வேலையா என்று இன்னும் தெரியவில்லை.

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

வாரத்தில் சலுகை வழங்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

ஆரம்பத்தில் கழகத்தின் உப தலைவர் ஸ்ரீமதி லலிதா கழகத்தின் ரிப்போர்ட்டை சமர்ப்பித்து, கழகத்தின் நோக்கங்களை விவரித்தார்.

குமாரி கமலா, ஸ்ரீமதி வைஜயந்திமாலா, ஆகியோர் பேசுகையில் நாட்டியக் கலை அபிவிருத்திக்கு பொதுமக்களும் சர்க்காரும் ஆதரவளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

நாட்டியக் கலா விற்பன்னர் வழுவூர் ராமையா பிள்ளை பேசுகையில் நாட்டியம் உயர்ந்த, கண்ணியமான முறையில் நிலைநிறுத்தப்பட வேண்டுமென்று கூறி, அருவருக்கத்தக்க [illegible] நடன முறை[illegible] நாட்டவர் காப்பியடி[illegible] குறை கூறினர்.

இறுதியில் குமாரி கமலா, லலிதா, ராகினி, பாரதி, ரமணிகோபால், சரஸ்வதி கான நிலைய கோஷ்டியினர் ஆகியோரால் பல நடனங்கள் இன்னிசையுடன் நடத்திக் காண்பிக்கப்பட்டன.

டாட்டா கம்பெனிக்கு ரூ. 12 கோடி கடன்

சர்க்கார் பணத்திலிருந்து கொடுக்கப்படும்

மத்திய [illegible] அ[illegible]

செ[illegible] மத்திய ச[illegible] வர்த்தக மந்[illegible] ரு. [illegible] கிருஷ்ணமாசாரி இன்று காலை டெல்லியிலிருந்து விமானமூலம் வந்திறங்கினர். அவர், "டாட்டா இரும்பு உருக்கு கம்பெனிக்கும், வங்காள உருக்கு கார்பரேஷனுக்கும் சர்க்கார், அவைகள் தங்கள் விரிவுத் திட்டங்களை நிறைவேத்தும் பொருட்டு 12 கோடி ரூபாய் கடனாக சீக்கிரம் கொடுக்கும் என்று கூறினர். இந்தக் கடன் தொகை இரும்பு உருக்கு கண்ட்ரோலரின் ஈக்வலைசேஷன் பண்டிலிருந்து கொடுக்கப்படும் என்று கூறினர்.

ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் திரு. கிருஷ்ணமாச்சாரி, சர்க்காருக்குச் சொந்தமான பூரணமான இரும்பு [illegible]ருக்கு [illegible]ச்சாலையை நிறுவுவது [illegible] ஆ[illegible] சனைகள் உ[illegible] என[illegible] 'இந்திய [illegible]கார் இ[illegible] [illegible] தீவிர[illegible] [illegible]ரிக கவனித்து

[illegible] உருவாக [illegible] அவைகள் பற்றி [illegible] முடிவாக தீர்மானமாகவில்லை." என்றார்.

கிளர்ச்சி அர்த்தமற்றதாம்!

ஹைதராபாத், ஆக 30— ஹைதராபாத்தை சேராதவர்கள் ஹைதராபாத் சர்க்கார் உத்தியோகங்களில் இருப்பதை எதிர்த்து நடக்கும் கிளர்ச்சியை ஹை[illegible] பாத் பிரதேஷ் காங்[illegible] கமிட்டியின் மாஜி செய[illegible] கள் திரு. எம். ஆர். ராவு[illegible] தேசாயும் இன்று கண்[illegible] பேசினர். நாட்டின் [illegible] வாழ்வை நாசம் செ[illegible] ளின தூண்டுதல் அது[illegible] கூறினர்.

சர்க்கார் உத்தி[illegible] [illegible] 5 [illegible]

பாதுகாப்பு சிப்பந்திகள் வேலை நிறுத்தம்

பூனா, ஆக. 30— பாதுகாப்பிலாக சிப்பந்திகளின் வேலை நிறுத்தக்கமிட்டி உறுப்பினர் திரு. எம். என். குல்கர்ணி "கிர்க்கி மத்திய ராணுவ கவச மோட்டார் கிடங்கு சிப்பந்திகள் 2[illegible] நாள் வேலை நிறுத்தம் [illegible] நடைபெற்றதைப் [illegible] சமாதானமாகவும், [illegible]ப்பாடாகவும் நடைபெ[illegible]றது," என்று கூறினர்.

நேற்று வேலைக்குச் சென்[illegible] சில சிப்பந்திகளிலும் பலா[illegible] வேலை நிறுத்த[illegible] கலா[illegible]து [illegible]னர் என [illegible]து.

பிச்சைக்காசு 5 சத விகித போனஸை வாங்காதே!

நாகர்கோவில் போக்குவரத்து தொழிற்சங்க அறைகூவல்

நாகர்கோவில் ஆக 29— ஸர். ஸி. பி. திவான் ஆட்சி காலத்தில் போனஸ் முதலாவது வழங்கப்பட்டது. அன்று நிகர லாபத்தில் விதிக்கப்பட்ட 5% போனஸ் ஒவ்வொரு தொழிலாளிக்கும் நல்ல துகை கிடைத்துவந்தது. ஆனால் அல்லும்பகலும் எலும்பு முறிய ஓய்வின்றி உறக்கமின்றி உழைக்கும் ஏழைத் தொழிலாளர்களை காப்பாற்ற உருவாக்கப்பட்ட ஜனநாயக சர்க்கார் காலத்திலே நிகர லாபத்தில் $7\frac{1}{2}$% போனஸாக வழங்கியும் இன்றைய விலைவாசியில் ஏதோ கொஞ்சம் பிச்சை காசுதான் தொழிலாளர்களுக்கு கிடைக்கிறது. இதுவும் வருடா வருடம் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைபோலாய்விட்டது. இந்த பிச்சை காசும் அடுத்த வருடம் கிடைக்குமோ என்னவோ சந்தேகம்தான்.

போலீஸ் வழங்கும் போதெல்லாம் சர்க்கார் அதன தனிநிறத்தை காட்டுகிறது. தோழர்களின் கட்டுப்பாடு ஒத்துழைப்பை கலைக்க காலிகளை, சுயநலமிகளை ஏவிவிட்டு ஆவன செய்ததுண்டு. ஆனால் முயற்சி பலிக்கவில்லை. டைரக்டர் இ. ஜி. ஸால்ட்டர் பதவியிலிருந்து சென்றபின அவருக்கு அளிக்கப்பட்டிருந்த போனஸை தொழிலாளர்களுக்கு அளிக்காமலிருக்க முயன்றது. ஆனால் அதிலும் $2\frac{1}{2}$% நமது ஒன்றுபட்ட தீர்மானத்தால் வாங்கினோம். சென்ற வருடம் போனஸை சின்னாபின்னப்படுத்த முயன்றனர் நமது அதிகாரிகள். அதிலும் நம் ஒற்றுமையை காணபித்தோம். வெற்றி பெற்றோம்.

லாபத்தில் ஓர் பகுதி தொழிலாளர்களுக்கு ஒரு பகுதி தீர்மானிக்கப்பட்டிருப்பதால் நிர்வாகம் நடத்தவும் யோசனை கேட்கவும் சர்க்காருக்கு உரிமையுண்டு. ஆனால் அந்த ஏற்பாடொன்றும் சர்க்கார் செய்ய தயாரில்லை. மேலும் டிப்பார்ட்மெண்டு நன்மையை முன்னிட்டு ஏதேனும் யோசனை கூறினால் அதிகாரிகள் வேண்டுமென்றே தள்ளுகின்றனர். எனினும டிரான்ஸ்போர்ட் பஸ் சர்வீஸ் நடத்தும் நாகர்கோவில்—குளச்சல், நாகர்கோவில்—தொழிவட்டி, தி. சந்தை, தக்கலை போன்ற ரூட்டுகளுக்கு பண மூட்டைகளுக்கு நேரடியாக சர்வீஸ் நடத்த பெர்மிட் அளிக்கப்பட்டிருப்பதை கண்டித்து தீர்மானம் அனுப்பியும் அதிகாரிகள் கவனிக்கவில்லையெனமேலும் சர்க்கார் வருவாய் சீர்குலைந்த வண்ணமே இருக்கிறது. லாபம் குறைவதில் இதுவும் ஒரு காரணம். லாபக் குறைவுக்கு தொழிலாளிகள் ஒருபோதும் ஜவாபதாரியாகமாட்டார்கள்.

எனவே லாபத்தை லட்சியமாக்காமல் ஒருதொழிலாளிக்கு மொத்த வருட வருமானத்தில் 25% போனஸாக வழங்க வேண்டுமெனபது தொழிலாளர்களின ஏகோபித்த தீர்மானம். கனம் மந்திரி அதை மறுத்து விட்டார். வேண்டுமானால் நிகர லாபத்திலிரோடு செப்பனிட ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் $13\frac{1}{2}$ லட்சம் ரூபாயும் கூட்டி அதில் $7\frac{1}{2}$% போனஸ் தரலாமென்று பதில் கூறியுள்ளார்.

இத்தீர்மானம் தொழிலாளர்களை தூக்கி வாரிப் போட்டுவிட்டது. எனவே, லாப அடிப்படையில் விதிக்கப்படும் போனஸ் தொழிலாளர்கள் வாங்கக் கூடாதென்று திரு-கொச்சி சமஸ்தான டிரான்ஸ்போர்ட் நான பென்ஷனபிள் சிப்பந்திகள் சங்கம் மத்திய கமிட்டி தீர்மானித்திருக்கிறது. இது சம்மந்தமாக ஒரு முடிவுக்கு வருமுன ஒரு தொழிலாளியும் போனஸ் வாங்கக்கூடாதென்று நாகர்கோவில் ஜில்லா யூனியன முடிவு செய்துள்ளது.

மீண்டும் கொள்ளையர் தாக்குதல்

டோக்யோ, ஆக. 30— 80 அமெரிக்க போர் விமானங்கள் மஞ்சூரிய எல்லையில் சினுஜூ நதியிலுள்ள சூயிஹோ அணை அருகில் கொரிய எம். ஐ. ஜி. விமானங்களை எதிர்த்துப் போரிட்டன. பிரிட்டிஷ், கனடிய விமானிகள் இந்த அமெரிக்கக் கொள்ளை விமானங்களை ஓட்டி வந்திருக்கின்றனர்.

இதற்கு சிறிது நேரத்திற்கு முன அமெரிக்க சூப்பர் கோட்டை விமானங்கள் வட கொரியத் தலைநகர் பியாங்யாங் மீது பறந்து சோசின் நீர் மின்சார நிலயத்தின மீது குண்டுவீசின.

நேற்று நடைபெற்ற ராக்ஷஸத் தாக்குதலினால் பியாங்யாங் ரேடியோ வேலை செய்யாமல் போய் விட்டதாம்.

கலைஞர்கள் சமூக சேவையில் இறங்குக!

அகில இந்திய நாட்டியக் [illegible]ழக ஆரம்ப விழாவில்

திரு. கரஞ்சியா தலைமையுரை

சென்னை, ஆக. 31— நேற்று மாலை 5-30 மணிக்கு சென்னை மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் அகில இந்திய நாட்டியக்கழகத்தை சி. பி. ராமசாமி அய்யர் ஆரம்பித்து வைத்தார். விழாவிற்கு "பிளிட்ஸ்" ஆசிரியர் ஆர். கே. கரஞ்சியா தலைமை வகித்தார். இந்திய உப ஜனாதிபதி டாக்டர் எஸ் ராதாகிருஷ்ணன் விழாவில் மேடைமீது பிரசன்னமாயிருந்தார்.

விழாவிற்குத் தலைமை வகித்த ஆர். கே. கரஞ்ஜியா பேசுகையில், கலைஞர்கள் தனி நபர்களாக இருந்தால் பயனில்லையென்றும், அவர்கள் சமூகத்தின், நாட்டின், நாகரீகத்தின் உயர்வுக்காகப் பாடுபட வேண்டும் என்று கூறினர்.

எழுத்தாளர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அகில இந்திய ஸ்தாபனத்தை ஏற்படுத்தியிருப்பதுபோல், இந்தியா பூராவிலுமுள்ள கலைஞர்களெல்லாம் ஒன்று சேர்ந்து அகில இந்திய கலைஞர்கள் சம்மேளனத்தை ஏற்படுத்திக் கொண்டு, தங்கள் நிலை உயரப் போராட வேண்டுமென்றார். அப்பொழுது தான உண்மையான மக்கள் கலையையும் வளர்க்க முடியுமென்றார்.

தான் சமீபத்தில் சீனாவிற்குச் சென்றபோது, அங்கு முன்னே தனி நபர்களாகச் சிதறுண்டு, குறுகிய மனப்பான்மை கொண்டிருந்த கலைஞர்கள் இப்பொழுது ஒன்றுபட்டு அகில சீன ரீதியில் மக்களுக்கு சேவை செய்ய முன் வந்திருப்பதையும், அதனால் கலையையும், தங்கள் வாழ்க்கையையும் உயர்த்திக் கொண்டிருப்பதையும் குறிப்பிட்டார்.

விழாவை ஆரம்பித்து வைத்த சர். சி. பி. பேசுகையில், நாட்டியக் கலையில் உயர்ந்த தரத்தை ஏற்படுத்துவதற்கு இத்தகைய ஒரு அகில இந்தியக் கழகம் அவசியமென்றார்.

கழகத் தலைவர் டைரக்டர் சுப்ரமணியம் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், "கலாசார முன்னேற்றத்தின் மூலம் நம் நாட்டின் பல்வேறு தேசிய இனங்களுக்கிடையில் ஏற்படும் சச்சரவுகளைப் போக்கிக்கொள்ள முடியும்" என்றார்.

சினிமாவையும், நாடகத்தையும் இழிவாகப் பேசும் சில சென்னை அமைச்சர்களின போக்கைக் கண்டித்தார். கலைஞர்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்றும், ரயில்வே போக்கு

(ஐந்தாம் பக்கம் பார்க்க)

சிப்பந்திகளுக்கு போனஸ் கொடு!
எம். ஈ. எஸ். தொழிலாளர் கூட்டத்தில் கோரிக்கை

சென்னை, ஆக. 30—

எம். ஈ. எஸ். கம்பெனியை சென்னை சர்க்கார் எடுத்துக் கொண்ட 6 வருட ஆரம்ப நாளாகிய 29-8-52 சென்னை மின்சார சர்வீஸ் சிப்பந்திகள் கோரிக்கை நாளாகக் கொண்டாடினர். பேசின பிரிட்ஜ் மின்சார நிலையத்திலிருந்து மாலை 5 மணிக்கு ஒரு ஊர்வலம் நடைபெற்றது.

நேப்பியர் பூங்காவில் தோழர் வி. எஸ். சோமசுந்தரம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் டி. ஆர். கணேசன், பி. ஆர். ராஜகோபால், மோஹன், பாபு முதலியோர் பேசினர்.

சென்னை எம். ஈ. எஸ். தொழிலாளர் சங்கத்தை நிர்வாகம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், 43,000 மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கு மின்சாரத்தை குறைந்த வாடகையில் சப்ளை செய்ய வேண்டுமென்றும், 1951ல் 40 லக்ஷத்திற்கு மேல் கிடைத்திருப்பதால் போனஸ் கொடுக்க வேண்டுமென்றும், டெம்பரரியாக வேலை பார்க்கும் ஒரு வருட சர்வீஸுக்கு மேலுள்ள 1,000 பேர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்றும், அவர்களுக்கு பஞ்சப்படி விடுமுறை வசதிகள், பிராவிடண்ட் பண்ட் வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்றும், குறைந்த சக்தி மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கு 10 சதவிகித உபரி கட்டணத்தை ரத்து செய்ய வேண்டுமென்றும், தஞ்சை குத்தகைதார், வாரதார், பண்ணையாள் பாதுகாப்பு அவசரச் சட்டத்தை வரவேற்றும், மேலும் நிலச் சீர்திருத்தத்தை செய்ய வேண்டுமென்றும், மாகாணத்திலுள்ள 39000 கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்க சர்க்கார் பாடுபட வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

இளைஞர் காங்கிரஸ் போர்வையில் வகுப்பு வாதிகள்

பொள்ளாச்சி, ஆக. 25—

பொள்ளாச்சி நகரில், இளைஞர் காங்கிரஸிலுள்ள சில நபர்கள், ஜனவிரோத பிற்போக்காளர்களுடைய நலனுக்காக மக்களை பிளவுபடுத்தும் தங்களுடைய தொடர்ந்த திருப்பணியில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்துள்ளார்கள். வகுப்பு துவேஷம் மதவெறி, பலாத்காரத்தை தூண்டும் வகையில் பிரச்சார ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்துள்ளார்கள். ஈ. வே. ரா அண்ணாத்துரை இவர்களை நீச பாஷையில் தாக்கி எழுதியும், ஊரெங்கும் வால் போஸ்ட் ஒட்டியுள்ளார்கள். விடுதலையில் இஸ்லாம் மதத்தைப்பற்றி ஒரு விமர்சனம் செய்ததை ஒரு சாக்காகவைத்து இந்த "இஸ்லாம் பக்த" இளைஞர் காங்கிரஸ்வாதிகள் முஸ்லீம்களைக் கிளப்பி விட முயல்கிறார்கள்.

போலி ஓட்டர்களைத் தடுக்க கையில் மை தடவுவது அவசியம்
தோழர் நாகி ரெட்டி அறிக்கை

சென்னை, ஆக. 30—

சென்னை சட்ட சபையில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராயுள்ள தோழர் டி. நாகிரெட்டி பின் வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளார்:—

சட்டசபைத் தேர்தல்களின் போது செய்ததுபோல் இந்த முனிசிபல் தேர்தலில் ஓட்டர்களின் கையில் மை தடவும் முறையை சர்க்கார் ரத்து செய்துவிட்டது என்று தெரிகிறது. பொய் ஓட்டுகள் விழாமல் தடுப்பதற்காக கடந்த பொது தேர்தலின்போது, வோட்டுப் போடுவதற்கு முன் ஓட்டரின் உள்ளங்கையில் கருப்பு மையினால் ஒரு பொட்டு வைக்கப்பட்டு வந்தது.

இப்பொழுது சர்க்கார் அதை ஏன கைவிட்டு விட்டது என்பது எனக்குப் புரியவில்லை. [illegible] தேர்தலைக் காட்டிலும் முனிசிபல், ஜில்லா போர்டு தேர்தல்களில் தான் அதிக பொய் ஓட்டுகள் விழும் சந்தர்ப்பமிருக்கிறது.

ஆகவே அந்த நிலைமை ஏற்படாமல் தடுக்கவும், ஓட்டுப் போட்டு விட்டார், இல்லையா என்ற தகராறுகளை தவிர்க்கவும், சர்க்கார் கையில் மை தடவும் அம் முறையைத் தொடர்ந்து கையாள வேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன். ஸ்தல ஸ்தாபன மந்திரி உடனடியாக இதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யும்படி நான் வேண்டிய ஏற்பாடு செய்யும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

இரும்புப் பெட்டிக்குள் தலையில்லாத உடல்

தஞ்சாவூர், ஆக. 30—

25 வயது மதிக்கத்தக்க ஒரு வாலிபனின் தலையில்லாத வெட்டுண்ட உடல் ஒரு டிரங்க் பெட்டிக்குள் திணிக்கப்பட்டு, நேற்று இண்டோ சிலோன் எக்ஸ்பிரஸ் வண்டியில் சிவங்கை, பரையங்குளம் ஸ்டேஷனுகளுக்கிடையே கண்டு பிடிக்கப்பட்டது.

தனியாக ரயிலில் இருந்த டிரங்க் பெட்டியின் மீது சந்தேகம் கொண்டு, ரயில்வே போலீசுக்குத் தகவல் தெரிவித்ததின் பேரில், இந்த கொலை கண்டுபிடிக்கப்பட்டதாம். கொலை செய்யப்பட்டவரின் பிரேதத்தை அடையாளம் கண்டுபிடிப்பவர்களுக்கு பரிசு அளிக்கப்படுமென்று போலீசார் அறிவித்துள்ளனர்.

உணவுப் பொருள் நெருக்கடி பற்றி
விவசாயத் தலைவர் அறிக்கை

உத்தமபாளையம் ஆக. 30—

மதுரை ஜில்லா விவசாயிகள் சங்க உப-தலைவர் தோழர் எம். ஜமால் முஹையதீன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:—

இப்பொழுது நெல் 48 படி கொண்ட கலம் ரூ. 32க்கும் சர்க்காரால் விநியோகிக்கப்படும் செஞ்சோளமும் ரூ. 32க்கும் கள்ள மார்க்கட்டில் விற்கப்படுகிறது. உத்தமபாளையம் சப் தாலுக்காவில் 2 பெரிய வியாபாரிகளான சின்னமனூர் கிருஷ்ணபிள்ளை, ராயன்பட்டி சவரிமுத்து இடையார் இவர்களுக்கு மட்டும் 10,000 மூட்டைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதேசமயம் பொது ஜன ஸ்தாபனமான கோவாப்ரேடிவ் ஸ்டோருக்கு 300 மூட்டைகளே கொடுக்கப்பட்டுள்ளன.

அந்த 300 மூடைகளிலும் பெரும்பகுதி சில்லரை தானியக் கடைக்காரர்களுக்கு ஒதுக்கிவிட்டு ஒரு சிறு பகுதியே கோவாப்ரேடிவ் ஸ்டோர் வைத்து நடத்தும் சில்லரைக் கடைக்கு விநியோகம் செய்ய அனுமதித்துள்ளனர்.

சோளம் முதலிய புஞ்சை தானியங்களை அதிகமாக உபயோகிக்கும் ஏழை விவசாயிகளுக்கு போதிய தானியம் கிடைப்பதி[illegible]. மேலும், இங்குசெஞ்சோளம், (மைலோ) படி 0-7-5 கிபசா விதம் மலிவு தானியக் கடைகளில் வாங்குவதற்குப் பதில் படி 0-9-6 விதம் வெளி வியாபாரிகளிடம் வாங்கவேண்டிய நிலையிருக்கிறது. கோவாபரேடிவ் ஸ்டோர் மட்டும் தனக்கு ஒதுக்கிய தானிய முழுவதையும் ஒழுங்காக விநியோகம் செய்வதால் அங்கு கூட்டம் அதிகமாகவும். போதிய தானியம் இல்லாததால் கொஞ்சமாகவும் விநியோகம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே,

1. கோவாபரேடிவ் ஸ்டோர் போன்ற பொதுஜன ஸ்தாபனங்களுக்குத்தான் முதலிலும், அதிகமாகவும், தானிய சப்ளை செய்யவேண்டும்.

2. எல்லாவிதமான சில்லரைக் கடைகளுக்கும் ஒரே அளவு தானியம், ஒரு வாரத்திற்கு மட்டும் சப்ளை செய்ய வேண்டும்.

3. சர்க்காரால் கொடுக்கப்படும் தானியம் மக்களுக்கு ஒழுங்காகக் கிடைக்க சர்க்கார் அதிகாரிகள், ஸ்தல எம். எல். ஏக்கள் பொதுஜன ஊழியர்கள்கொண்ட கமிட்டிகளின் மேற்பார்வை இருக்கவேண்டும். இவைகளைச் சரிவர சர்க்கார் செய்தால்தான் மக்களுக்கு ஒழுங்காக தானியம் கிடைக்குமென்றும், இடைத்தட்டுக்காரர்களின் கொள்ளை ஒழியுமென்றும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பரோலில் வந்திருக்கும் தோழர் கிருஷ்ணனுக்கு வரவேற்பு!

கண்டரமாணிக்கம், ஆக. 30—

25-8-52ல் கண்டரமாணிக்கம் பொதுமக்கள் சார்பாக திரு. ஏ. டி. கோட்டைசாமி தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான ஊழியரும், கடந்தகால விவசாயத் தலைவரும், பரோலில் வெளிவந்திருப்பவருமான தோழர் எஸ் கிருஷ்ணனுக்கு வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

திரு. ஏ. டி. கோட்டைசாமி தோழர் கிருஷ்ணனுடைய சேவைகளைப் பாராட்டிப் பேசினார். மற்றும் தோழர்கள் வ., ராமசாமி, வி. வீரபத்திரன், படியான் கோனார் ஆகியோர் தோழர் எஸ். கிருஷ்ணனை வரவேற்றுப் பேசினர்கள்.

பலத்தகரகோஷத்திற்கிடையே தோழர் எஸ். கிருஷ்ணன் பேசினார். பல ஸ்தாபனங்களின் சார்பாக அவருக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன. வலயப்பட்டி விவசாயிகள் தலைவர், தியாகி ராமநாதனை சித்திரவதை செய்து காங்கிரஸார் கொன்றதை அவர் விரிவாக எடுத்துக் கூறினார். காங்கிரஸ் ஆட்சி வெள்ளையன ஆட்சியைவிட கேவலமாகி விட்டதாக அவர் கூறினார் கம்யூனிஸ்டுகள் மீது போடப்பட்ட பொய்க் கேஸ்களை அவர் அம்பலப்படுத்தினார்.

திருப்பத்தூர் தாலுகாவை பஞ்சப் பிரதேசமெனப் பிரகடனப்படுத்த வேண்டுமென்றும், சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்து, சதி வழக்குகளையும் வாபஸ் வாங்க வேண்டுமென்றும், விவசாயிகளுக்குக் கடன் வசதி, நீர்ப்பாசன வசதிகள் கோரியும், புதிய வரிகளையும், எஸ்டேட் நிலவரிக் குறைப்பு மசோதாவிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் திருத்த மசோதாவைக் கைவிட வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சானிடரி இன்ஸ்பெக்டரின் தர்பார்
பெண்தொழிலாளியை செருப்பால் அடித்தார்

சூரமங்கலம், ஆக. 25—

24-8-52 காலை 5 மணிக்கு வழக்கம்போல் நகரசுத்தி தொழிலாளர்கள் ஆஜர் கொடுக்க போனார்கள். அதில் கொண்டாயி என்னும் பெண் தொழிலாளி தூக்கத்தினின்றும் விழித்து நேரம் ஆய்விட்டதோ என்று பயந்து அவசரமாக வந்து ஆஜர் கொடுக்க வந்து நின்றார். அவர் நிற்கும் இடத்திற்கும், சேனிடரி இன்ஸ்பெக்டர் இருக்கும் இடத்திற்கும் சுமார் 15 அடி தூரம் இருக்கும்.

அப்படி யிருந்தும் அந்த அம்மாள் கீழே துப்பியதற்கு இன்ஸ்பெக்டர் கழுதை, குதிரை' என்று சாக்கடை பாஷையில் திட்டி யிருக்கிறார். அதற்கு அவர், 'என்ன சாமி நான் எங்கே எச்சில் துப்பினேன்? பாருங்கள் கீழே விழுந்து இருக்கிறதா? இப்படி திட்டுகிறீர்களே? என்று கேட்டார். "என்னடி, வாயாடுகிறாய்! வாயை மூடு!" என்று மீண்டும் தன்னிஷ்டம் போல் திட்ட ஆரம்பித்தார். "காலையில் ஏன் சாமி இப்படி திட்டுகிறீர்கள்; சும்மா பழியை போடுகிறீர்களே, என்றுகேட்டதற்கு, "இன்னுமா பேசுகிறீர்களே", என்று கேட்டதற்கு இன்னுமா பேசுகிறாய்?" என்று தன் காலிலுள்ள செருப்பை கழட்டி வந்து தலையில் ஒரு அடி அடித்து மீண்டும் கையை ஓங்கும்போது அந்த பெண் பயந்து அவரின் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டார். பிறகு இதர தொழிலாளர்களும் சேர்ந்து இதை தடுத்து விட்டார்கள். பிறகு இன்ஸ்பெக்டர் வாய்க்கு வந்தபடி திட்டிக் கொண்டே போய் தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

துக்கம் தாங்கமாட்டாமல் 35 வயதுடைய அந்த தாய் போய் பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டு, நிர்வாக அதிகாரிகளிடம்சொல்லி இருக்கிறார். அவர்களும் நடவடிக்கை எடுப்பதாக சொல்லி வேலை செய்ய சொல்லி இருக்கிறார்கள்.

மேலும் ஸீப்பர்கள் சங்கத்தின சார்பாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும் 35 வயது பெண் தொழிலாளத் தாய், நாள் பூராவும் வேலைசெய்து கிடைக்கும் 29 ரூபாய் சம்பளத்தில்மாதம் 15 நாள் பட்டினிக் கிடந்துக் கொண்டு இருப்பவள்.

பொதுமக்களின் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் பொது ஜன ஊழியருக்கு கிடைத்தது செருப்படி. சானிடரி இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தொழிலாளிகள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள்.

மலேயா தினம்

போடி, ஆக. 25—

ஆகஸ்ட் 24உ ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணிக்கு போடி 8வது வார்டு மக்கள் திடலின் முன்பாக கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தோழர் வி. எஸ். மணியின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தோழர் தாத்தப்பன புரட்சி பாடல் பாடியபின், தோழர்கள் செங்கொடி ராமசாமி, ஆர். ஆர். சின்னையய்ய சாமி முதலானோர் பேசியபின் கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து மலேயா மக்கள் நடத்தும் புனித போராட்டத்தை, ஒழித்துக்கட்ட இந்திய மண்ணிலேயே நேரு சர்க்கார் கூர்க்கப்படைகளை திரட்டி அனுப்புவதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், பிரிட்டிஷ் இந்தியா நேப்பாலி முக்கூட்டு ஒப்பந்தத்தை [illegible]டனடியாக ரத்துசெய்ய [illegible]டுமாய் சர்க்காரை [illegible] கொள்கிறது.

பீகிங் மகாநாடு செல்ல தோழர் ஏ. கே. கோபாலனுக்கு பொருள் உதவி செய்க!
தோழர் சக்கரை செட்டியார் வேண்டுகோள்

சென்னை. ஆக. 31—

இந்தியா காபி தேயிலை லேபர் யூனியன் பார்வர்டு தோழர் வி. சக்கரை செட்டியார் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், பீகிங் சமாதான மகாநாட்டுக்குச் செல்லும் தோழர் ஏ. கே. கோபாலனின் பிரயாணச் செலவிற்குப் பண உதவி செய்யும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் தன்னுடைய அறிக்கையில் மேலும் கூறுவதாவது:

"இந்திய காபி போர்டு தொழிலாளர் சங்கத்தின் உப தலைவராகிய தோழர் ஏ. கே. கோபாலன அக்டோபரில் நடைபெறும் ஆசிய சமாதான மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக பீகிங் செல்லவிருக்கிறார் என்பது காபி போர்டு தொழிலாளர் சங்க அங்கத்தினர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். இந்தியத் தொழிலாளிகளைப் பிரதிநிதித்வப் படுத்தும் முறையில் நம் சங்க உபதலைவர் பீகிங்குக்குச் செல்வது மிகவும் பொருத்தமானதே.

அவருடைய போக்குவரத்துச் செலவுகளுக்கும் இதர செலவுகளுக்கும் நாம் அவருக்குப்பண உதவி செய்யவேண்டியுள்ளது. ஆகவே இந்தியா காபி போர்டு தொழிலாளர் சங்க மெம்பர்கள் அனைவரும் குறைந்தபட்சம் தலா ரூ. 1 கொடுத்து உதவும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். அத்தொகையை புதுடில்லியிலுள்ள இந்தியா காபி போர்டு தொழிலாளர் சங்க மத்தியக் காரியாலயத்திற்கு அனுப்பவும்."

நாட்டின் உணவு நிலைமை
அரிசி, சோளம் ஸ்டாக் குறைந்துவிட்டது; மைலோவில் வியாபாரிகள் கொள்ளை

பழனி. ஆக. 29—

கடந்த மாதத்தில் 17,000 மூட்டை மைலோ சர்க்கார் ஸ்டாக்காக வைக்கப்பட்டிருந்தது. இந் நகரத்தில் மட்டும் உள்ள 16 நியாயவிலைக் கடைகளில் ஒரு வாரத்திற்குப் போதுமான அரிசி ஸ்டாக் இருந்துவந்தது. இதுவன்றி மொத்த வியாபாரக் கடைகளில் சுமார் 5000 மூடைகளுக்கு மேல் நெல் இருந்து வந்தது. நெல் அரிசி இவ்விரண்டையும் திண்டுக்கல், மதுரை முதலிய இடங்களுக்கு ஷி ஸ்டாக்கிலிருந்து சர்க்கார் அனுப்பி வந்தது. இதன் மூலமாக நெல், அரிசி ஸ்டாக் மிகவும் குறைந்துவிட்டது. தற்சமயம், இத் தாலுக்காவிலுள்ள 33 நியாயவிலைக் கடைகளுக்கும், மேற்கொண்டு அரிசி தேவைக்குத்தான் ஸ்டாக் இருக்கிறது. மேற்கொண்டு அரிசியோ நெல்லோ வெளியிடங்களிலிருந்து இங்கே வரவில்லை என்றால் ஜனங்களுக்கு நியாயவிலைக் கடைகளின் மூலம் அரிசி கிடைக்காமல் போய்விடும்.

இதோடுகூட நியாயவிலைக் கடைகளில் அரிசி விற்பனையைக் குறைக்கவேண்டு ஒவ்வொரு வாரமும் அதிகாரிகள் வற்புறுத்துகிறார்கள். கடைகளை அதிகநேரம் திறந்து வைக்கக்கூடாது. எவ்வளவு தூரம் ஜனங்களை நியாய விலைக் கடைகளுக்கு வர விடாமல் தடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் தடுக்கிறார்கள். சிலநியாய விலைக் கடைக்காரர்கள் அரிசியை மொத்தமாக மூட்டைக்கு ரூ. 1-லிருந்து ரூ. 10 வரை லாபம் வைத்து விற்று விடுகிறார்கள். இங்கிலையில் வெளி மார்க்கெட்டில் அரிசி ஒரு படி ரூ. 1-3-0 லிருந்து ரூ. 1-6-0 வரை விற்கிறது.

சோள விற்பனையில் கொள்ளை!

சென்னை சர்க்கார் தன் கைவசமுள்ள மைலோவை) சோளத்தை விலை குறைத்து விற்பதாக அறிவித்தது. அதன்படி ஒருபடி சோளத்திற்கு [illegible] அணா வரை விலை குறை[illegible]. இதை பயன்படுத்திக் [illegible]கொண்டு பழனியிலுள்ள [illegible]மொத்த வியாபாரிகளான [illegible]. நடராஜ நாடார் 600 மூட்டையும் கருப்புசாமி[illegible]டர் 1100 மூடையும் [illegible]பி. அண்டு கோ. 1250 [illegible]டையும், வி எ. நாச்சிமுத்[illegible]ர் 1210 மூட[illegible] விட்டார் [illegible] மூட்டை [illegible] லிருந்து [illegible] லாபம் வைத்து [illegible]ட்டார்கள் எனத் [illegible]து. இதன் மூலம் அவர்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்கள் லாபம் கிடைத்திருக்கிறதாம். இவர்களிடம் வாங்கிய சில்லறை வியாபாரிகள் மூடை 1க்கு ரூ. 5லிருந்து ரூ. 10 வரை லாபம் வைத்து ஜனங்களுக்கு விற்றுக் கொள்ளையடித்ததாகத் தெரிகிறது.

நகர, கிராம, நியாய விலைக் கடைக்காரர்கள் தங்களுக்குக் கிடைத்ததில் ஒரு சிறு பகுதியை ஜனங்களுக்குத் தந்துவிட்டு மீதத்தை ரூ. 5லிருந்து ரூ. 10 வரை லாபம் வைத்து அஷ்டப்படி விற்றுவிட்டார்கள் எனத் தெரிகிறது.

ஆகவே உடனடியாக தற்சமயம் பழனியில் ஸ்டாக்கி[illegible]ள 7000 [illegible] சோளத் [illegible] இன் [illegible] மான [illegible]தை [illegible] யந்து [illegible] விலை [illegible] ஙக [illegible] விற்க [illegible]மென கோருகிறோ[illegible].

தஞ்சை அவசரச் சட்டப்படி ரெவின்யூ கோர்ட்டின் அதிகாரம்

சென்னை ஆக. 30—

முன் விடுத்த அறிக்கையைத் திருத்தும் விதத்தில் சென்னை சர்க்கார் தஞ்சை ஜில்லாவிலுள்ள 7 தாலுக்காக்களை அவசரச் சட்டத்தின் வரம்புக்குள் கொண்டுவந்துள்ளது.

கீழ்வரும் ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர்கள் அவர்கள் பேர்களுக்கு நேர் குறிப்பிட்டிருக்கும் தாலுகாக்களைக் கவனிப்பார்கள்.

திரு. பி. தங்கமணி, சீயாழி மயூரம் தாலுக்காக்கள் (தலைமைக் காரியாலயம் மயூரத்தில்).

திரு டி. எஸ். பாஸ்கரத்தொண்டமான் —கும்பகோணம், பாபநாசம், நன்னிலம் தாலுக்காக்கள் (தலைமைக் காரியாலயம் கும்பகோணத்தில்.)

திரு. எஸ் மணி மன்னார்குடி, திருத்துறைபூண்டி தாலுக்காக்கள் (தலைமைக் காரியாலயம் மன்னார்குடியில்).

கா[illegible]மன்னார் கோவில் [illegible]க்கள் துயரம்

காட்டுமன்னார்கோவில், ஆக. 29—

28-8-52ல் காட்டுமன்னார் கோவில் பொது மக்கள் சார்பில் சுமார் 750 கையெழுத்திட்ட மகஜர்கள் உயர்திரு முதல் மந்திரி ராஜாஜி அவர்களுக்கும் உணவு மந்திரி அவர்களுக்கும் தென்னாற்காடு ஜில்லா கலெக்டர் அவர்களுக்கும் இங்குள்ள உணவு நெருக்கடியை நிவாரணக் கடைகள் மூலம் அதிக உணவு வழங்கி குறை[illegible] தீர்க்க முன் வரும்படி கோரி மனுக்கள் (மூன்றும்) ரிஜிஸ்டர் செய்து அனுப்பப்பட்டுள்ளன.

ஜெர்மனி பற்றி சோவியத் குறிப்பு நிராகரிக்க மேற்கு நாடுகள் முடிவு

லண்டன், ஆக. 30—

ஜெர்மன் பற்றி பரிசீலிப்பதற்காக நான்கு வல்லரசு மகாநாடு நடத்த வேண்டுமென சமீபத்தில் சோவியத் ரஷ்யா மேற்கு நா[illegible]களுக்கு அனு[illegible]ப்பிய குறிப்[illegible] நி[illegible] தென அ[illegible] பிரெஞ்சு [illegible] தீர்மானி[illegible] கார பூர்வ[illegible] கூறுகி[illegible] [illegible] சர்[illegible]

சைகோனில் பெட்ரோல் கிடங்கு தீப்பிடித்தது

சைய்கோன், ஆக. 31—

[illegible]ரெஞ்சு ஏகாதிபத்தின் [illegible]த்தி[illegible]ள இந்தோ-[illegible]கான நகரத் [illegible]லையில் இரு[illegible]த [illegible]ராணுவ பெட [illegible]கு இன்று வெடி விபத்திற்குள்ளாகியது. நாச வேலையின் காரணமாகவே [illegible] வெடி விபத்து ஏற்பட்டி[illegible] [illegible]ஞ்சு [illegible]ராணுவ [illegible] [illegible]றனர் [illegible] [illegible] செய்[illegible] [illegible]கின [illegible]ணி நேரத்தில் 5 [illegible] [illegible]கள் ஏற்பட்ட[illegible] [illegible]லையில் [illegible]யங் [illegible]

பிரஜா-சோஷலிஸ்ட் கட்சியுடன் இணைவது சாத்தியமல்ல
பார்வேடு ப்ளாக் தலைவர் யாஜி கருத்து

கோவை, ஆக. 30—

"மார்க்ஸிஸத்தைத் தன் சித்தாந்தமாகக் கொண்டு, சோஷலிஸ்ட் புரட்சியில் நம்பிக்கையுடைய ஒரு கட்சி, காந்திய சோஷலிஸத்திலும், சர்வோதயத் திட்டத்திலும், நம்பிக்கையுடைய ஒரு கட்சியுடன் எவ்வாறு இணைய முடியும்?" என்று அகில இந்திய பார்வர்ட் பிளாக் உபதலைவர் திரு. ஷீலபத்ரயாஜி பத்திரிகை நிருபர்களிடம் இங்கு கூறினார். ஆச்சாரிய கிருபளானி, டி. பிரகாசம், அ[illegible]க் மேத்தா ஆகியோர், பார்வேட் பிளாக்கை பிரஜா-சோஷலிஸ்ட் கட்சியுடன் இணைத்து விடலாம் என்று தெரிவித்த கருத்துக்கு திரு. யாஜி மேற்கண்டவாறு பதில் கூறியுள்ளார்.

[illegible]ாரிக் கட்சி [illegible] அடிப்பட [illegible]சங்கள் இ[illegible] விவசாயி [illegible]ள், அ[illegible]

[illegible]றிய பிரச்னைகளில், அவைகளுடன் கூட்டணி அமைத்துக் கொள்ளத் தயாராகவே இருக்கிறது என்று ஷீலபத்ர யாஜி கூறினார்.

பார்வேட்புளாக்கின் [illegible]ட்டத்தைப[illegible] [illegible] பேசுகை[illegible]யில் அவர், [illegible] சோஷலிஸ்[illegible] விவசாயி[illegible]சு பட்ட [illegible]மக[illegible] யில் [illegible]ர்க்க தட்டி [illegible]முழுப் புரட்சியை விளை[illegible]டு வந்து, ஒரு இந்[illegible]லிஸ்ட் குடியரசு யூனியனை [illegible]றபடுத்துவதற்கு அவர்களைத் தயார்படுத்துவதற்கே தாங்கள் விரும்புவதாகக் கூறினார்.

பார்லிமெண்டரி முறைகளிலும், ஜனநாயக முறைகளிலும் சோஷலிஸத்தை ஏற்படுத்தி விடலாம் என்பதைத் தாங்கள் நம்பவில்லை என்று [illegible]மேலும் கூறினார்.

[illegible]துமக்களின் சர்வாதிகார (தலைமையின்) கீழ் [illegible] புரட்சியினால்தான [illegible]யம்" என்றார்.

[illegible]வும் பாகிஸ்தானும் [illegible] வேண்டும் என்ப [illegible]மகா சபை சொல் [illegible]ன ஒத்துக் கொள் [illegible]மேலும் கூறினார்.

[illegible]துவான திட்டத் [illegible]டை[illegible] பார் [illegible]க்கு[illegible]

அமெரிக்க அணுகுண்டுத் தாக்குதலை தடுக்க முடியாதாம்—வாண்டன்பர்க் கொக்கரிப்பு!

டெட்ராய்ட், ஆக. 30—

அமெரிக்க அணுகுண்டுத் தாக்குதலை எந்த சாதனத்தாலும் தடுத்து நிறுத்த முடியாது. என்று அமெரிக்க விமானப்படை பிரதம தளபதி ஜெனரல் வான்டன்பர்க் கொக்கரித்தான், சமீப காலத்திற்குள் அத்தகைய சாதன[illegible] யாராலும் கண்டுபிடிக்க [illegible] யாது என்றும் மார்தட்டின[illegible]

மக்கள் மன்றம்

'கல்கி'யர் அன்று எங்கு சென்றிருந்தார்?

"பேசின் உதவியினால் விவசாயம் நடக்குமா?" என்று தலைப்பிட்டு எழுதும் 'கல்கி'யார், [illegible] முன் [illegible] மாவட்டத்தில் விவசாயிகள் [illegible] பாதும் ஏன் இருட்டடிப்பு செய்தார்? அன்று விவசாயி பட்ட துயரம் கல்கியாருக்கு தெரியவில்லையா? அன்றும் காங்கிரஸ் சர்க்கார் தான், இன்றும் காங்கிரஸ் சர்க்கார் தான், அன்று ஏன் எழுதவில்லை—இன்று ஏன் கதறுகிறார்? அன்று விவசாயிகள் வீடுகள் [illegible] போதும் கண்ணுக்குத் தெரியவில்லை இன்று காங்கிரஸ் படு தோல்வியடைந்து விட்டது கண்ணுக்குத் தெரிகிறதோ? அன்று ராஜாஜி ஆட்சி—இன்று ராஜாஜி ஆட்சி என்ற காரணத்திலா? எதைக் கண்டு அன்று இல்லாத கவலை இன்று கல்கியாருக்கு ஏற்பட்டது, கூறுவாரா?

ஏ. துரை
கவுந்தப்பாடி (ஈரோடு). 26-8-52

★

வெள்ளையன் திமிர்!

அன்புள்ள தோழரே!

இங்கு லோயர்பார்லே என்னுமிடத்தில் காட்ரோல் என்னும் வெள்ளையன் போலீசின் பேரைச் சொல்லி பொது ஜனங்களை மிரட்டிவருகின்றான். ஆனால் இதே வெள்ளையன் கடந்த சில மாதங்களுக்குமுன் ஒரு தொழிலாளியைப் பிடித்து அடித்தும் பூட்ஸ் காலினால் உதைத்தும் இருக்கின்றான். இப்போது ரொட்டிக்கடை என்னுமிடத்தில் சர்க்கார் இடமென்று சொல்லி கடந்த பல வருடங்களாக ஏலத்தில்விட்டு சில தொழிலாளிகள் அதை எடுத்துத் தங்கள் வீடுகட்டுவதற்கும், தோட்டம் போடுவதற்கும் கொஞ்சம் இடத்தை வைத்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளிகளால் அரசாங்கத்திற்கு நூற்றுக்கணக்கான ரூபாய் வாடகையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இப்போது அந்த வெள்ளை முதலாளி அந்தத் தொழிலாளிகளைப் பார்த்து ஒரு மாத காலத்திற்குள் அந்த இடத்தைக் காலி செய்யும்படி கூறுவதும், மீறினால் போலீசை கூப்பிட்டுவிடுவேன் என்றும் அந்தத் தொழிலாளியை மிரட்டிவருகின்றான். ஆனால் அந்தத் தொழிலாளிகள் தங்களுக்கு வசிப்பதற்கு வேறு இடம் கொடுத்தால மாறிவிடுகிறோம் என்றும் வாக்குறுதி கொடுத்திருக்கின்றார்கள். அந்த வீடுகள் எல்லாம் அதிகம் புல்லினால் வேயப்பட்டவை. காங்கிரஸ்காரர்களால் கூறப்படுகிற சுதந்திரம் கிடைத்த பிறகும் வெள்ளையனின் மிருகத்தனம் ராமராஜ்யம் போலீசை சுட்டிக்காட்டி ஜனங்களை மிரட்டிக் கொண்டிருப்பதை இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சி. மதுரம்,
வால்பாரை 27-8-52

★

கல்லுப்பிள்ளையார்கள்!

அவனசி பஞ்சாயத்து போர்டு நிர்வாகத்தில் வரவர ஊழல் மலிந்துவிட்டது. காபி கடை, டீ கடை, சில்லரை வியாபாரிகள் முதலியவர்களிடம் பயமுறுத்தி லஞ்சம் வாங்கப்படுகிறது. கிராமங்களிலிருந்து விற்பனைக்கு பால் கொண்டு வரும் பெண்கள், அவனசி வார சந்தையில் வியாபாரம் செய்யும் டீ கடைக்காரர்கள் சோடா கடைக்காரர்கள் டீ, காபித்தூள் வியாபாரிகள் முதலியவர்களிடம் சானிடரி இன்ஸ்பெக்டர் மாதா மாதம் தொடர்ந்து லஞ்சம் வாங்குகிறார் என்று தெரிகிறது. பஞ்சாயத் போர்டில் 'டெண்டர்' எடுத்து வேலை செய்யும் கண்ட்ராக்டர்களிடமும் நிர்வாகம் பங்கு பெறுகிறது என்று கூறப்படுகிறது. மார்க்கெட், சுங்கம், கண்ட்ராக்ட் எடுத்திருப்பவர் சட்டவிரோதமாக அனியாயமாக விறகு, புல் சுமை பால் முதலிய தலைச்சுமை வியாபாரம் செய்யும் ஏழை மக்களிடம் பலாத்காரமாக மார்க்கெட் வரி என்ற பெயரால் வரி வசூலிக்கிறார். (மார்க்கட்டில் மாத்திரம்தான் வரி வசூலிக்க வேண்டும்) இவைகளைப்பற்றியெல்லாம் எங்கள் சங்கத்தின் சார்பாக 4-5-52 லும் ஆகஸ்டு 15ந்திலும் நடந்த கூட்டங்களிலும் கண்டன தீர்மானங்கள் நிறைவேற்றியும் நிர்வாகம் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. [illegible] மாதிரி போகும் போது தேர்தலில் மக்கள் [illegible] தக்க பதில் [illegible] பது நிச்சயம்.

ஐ. எம். ஷரீப்
அவனசி 27-8-52

★

போர்மேன் தடபுடல்

ஐயா,

கூனூர் லோகோ ஷெட்டின் மேல் அதிகாரி ஒரு போர்மேன் இருக்கிறார். அவர் பெயர் திரு. [illegible] முதலியார். அவர் டெயிலிவேலே செய்யும் தொழிலாளிகளிடம் தன் வீட்டு வேலைகளை செய்யும்படி நிர்ப்பந்திக்கிறார். [illegible] பலரை வேலைக்கு வரும்படி நிர்பந்திக்கிறார். அவர் இஷ்டப்படி வீட்டு வேலைக்கு போகாவிட்டால் வாயில் வந்தபடியெல்லாம் ஏசுகிறார். அத்துடன் விட்டுவிடுவதில்லை. உடனே ஊரை விட்டே மாற்றி விடவும் ஏற்பாடு செய்கிறார்.

இப்படி மாற்றப்பட்ட ஒரு தொழிலாளி தற்சமயம் தன மனைவி கர்பவதியாக இருப்பதால் (பிரசவகாலம) மாற்றலை தள்ளிப்போட கேட்டால் "நான் உன்னைத்தான் மாற்றினேன் அல்லாமல் உன் மனைவியை அல்ல" என்று கிண்டலாக பதிலளிக்கிறார். லீவு கொடுக்காமல் தொழிலாளிகளுக்கு இடைஞ்சல் கொடுக்கிறார். இதைபோன்று கதை கதையாக சொல்லலாம்.

இவரையும் மிஞ்சுவதாக, இவருக்கு வாத்தியாராக இருக்கும் டைம் கீப்பர் கோபால் நாயர் ஆர்பாட்டம் அதிகம். ஒரு தொழிலாளி லீவு முடிந்து டாக்டர் சர்டிபிகேட்டுடன் வேலைக்கு திரும்பி வந்தால வேலை கொடுக்காமல் சம்பளம் கழிக்கும்படி செய்வது போன்ற சில்லரை தொந்தரவுகள் கொடுத்து வருகிறார்,

இவர்கள் இருவரும் தொழிலாளிகளை தொடர்ந்து ஆத்திரமூட்டி வருகிறார்கள். சீக்கிரத்தில இவர்கள் திருந்த வேண்டும் அல்லது வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டும். இதை ரயில்வே நிர்வாகம் கவனிக்குமா?

கூனூர், 29-8-52. இப்படிக்கு, ரயில்வே தொழிலாளி.

★

பிரேக்ஸ்மென் துயரம்

ஐயா,

மேட்டுப்பாளையத்திலிருந்து உதகை வரை சுமார் 33 மைல்கள் ரயில் நேர் உயர செங்குத்தாக செல்கிறது. குகைகள் வழியாகவும். கிடுகிடு பள்ளத்தாக்குகளையும் தாண்டிச் செல்கிறது. இரு பக்கங்களில் பெரும் குன்றுகளும், பள்ளங்களும் உள்ளன. கூனூர் வரை பல சக்கரத்துடன் செல்கிறது. என்ஜின் கடைசியிலிருந்து மற்றவண்டிகளை மேலே தள்ளி தள்ளிக் கொண்டு செல்கிறது. கீழே இறங்கும் போதும் சர்வ ஜாக்கிரதையாக செல்ல வேண்டும். வண்டி போகும் தூரம் 8 மைல்தான். ஒவ்வொரு வண்டியிலும் பிரேக் வைக்கப்பட்டிருக்கிறது. பிரேக்ஸ்மென் ஒருவர் இருக்கிறார். மேலே செல்லும் போது வண்டிக்கு பாதத்தில் சிக்காமல் அழைத்துப் போக வேண்டிய பொறுப்பு இவர்களுடையது.

கீழே இறங்கும் போதும் இவர்கள் பொறுப்பு அதிகம். இவர்கள் அஜாக்ரதையாக இருந்தால் அதோகதிதான். வண்டியின் ஒருபுறத்தில் இருக்கும் பிளாட்பாரத்தில் நின்று செல்ல வேண்டும். மழைகாற்று, பனி அனைத்தையும் சகித்துக் கொண்டு தான் செல்ல வேண்டும். ஆனால் இவ்வளவு கடுமையான பொருப்புடன் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு எவ்வித பிரத்யேக பிரதிபலனும் இல்லை. ரயில் சார்ஜ மட்டும் சமவெளியைப் போல் மூன்று மடங்கு வாங்கப்படுகிறது சமவெளியிலுள்ள பிரேக்ஸ்மென்கள் பால இவர்களும் அதே கிரேட், சம்பளம் பெற்று வருகிறார்கள்.

அத்துடன் இவர்களுக்கு பிரத்யேக கம்பெனி உடைகள் சரிவர கொடுப்பதில்லை. இந்த நிலமையை விளக்கி நீலகிரி ரயில்வேயிலுள்ள இந்த தொழிலாளிகள் ஒரு மகஜர் சமர்ப்பித்து, சம்பந்தப்பட்டவர்களுக்கெல்லாம் அனுப்பியிருக்கிறார்கள், இவர்களுடைய பிரத்யேக குறைகளைப்பற்றி மற்றொரு பகுதியினருக்கு தெரியாத நிலமை இருப்பதால் வருகிற பொன்மலை மகாநாட்டில் இந்த கோரிக்கையை முக்கியமாக எடுத்து, நிர்வாகத்தை வற்புறுத்தப்போகிறார்கள்.

இப்படிக்கு,
பிரேக்ஸ்மென்கள்

ஜெயப்பிரகாஷ் காட்டும் வழி!

லக்ஷ்மணபுரி, ஆக. 30—

"நேர்மையுடனும், கடுமையாகவும் உழைப்பதுதான் இந்தியாவின் சுபீட்சத்திற்கு அஸ்திவாரம், அதைத் தவிர தேச புனர் நிர்மாணத்திற்கு வேறு வழி கிடையாது" [illegible] திரு. ஜெ[illegible] [illegible]யண [illegible] சேவா [illegible]சினர்.

தடுப்புகாவல் சட்டத்தை ரத்துசெய்!

கட்ஜு வருகையின் போது பாட்டியாலா மக்கள் ஆர்ப்பாட்டம்

பாட்டியாலா, ஆக. 29—

"இந்த ராஜ்யத்தில் அநீதி நிலவுகிறது", "ராஜப்பிரமுகர் முறையை ரத்து செய்" "வகுப்பு வாதம் ஒழிக" "தடுப்புக் காவல் சட்டத்தை ரத்து செய்" என்ற கோஷங்களுடன் ஒரு ஜனக் கூட்டம் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு, இந்திய சர்க்கார் உள்நாட்டு மந்திரி கட்ஜு பாட்டியாலா வந்த போது அவரை 'வரவேற்றது.'

சுமார் 2000 மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

பாட்டியாலாவைத் தலைநகராகக் கொண்ட பெப்சு ராஜ்யத்தில் காங்கிரஸல்லாத மந்திரி சபை இருந்து வருகிறது. இங்கு நிலச் சீர்திருத்தங்களுக்காக விவசாய இயக்கம் பெரிய போராட்டம் நடத்தி வருகிறது.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு பதில்சொல்லும்போது, "நான் இந்திய சர்க்காரின் உள்நாட்டு மந்திரி என்ற முறையில், சட்ட விரோதத் தன்மையை ஒழிப்பதற்கே இங்கு வந்துள்ளேன்" என்று திமிருடன் பதில் கூறினர்.

ஐக்ய தமிழகத்திற்குக் கிளர்ச்சி செய்க!

தூத்துக்குடி, ஆக. 25—

தூத்துக்குடி ஐக்கிய முன்னணி வாசகசாலையின் ஜெனரல்பாடிக் கூட்டம் 24-8-52ல் நடைபெற்றபோது கீழ்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

1. சித்தூர் ஜில்லாவிலுள்ள தமிழ் பிரதேசமும், சென்னை நகரமும், திருவாங்கூர் தமிழ் பிரதேசமும், அன்னிய ஏகாதிபத்தியத்தின் கீழ் சிக்குண்டிருக்கும் புதுச்சேரி, காரைக்கால் உள்ளிட்ட ஐக்கிய தமிழகம் அமைக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்வதுடன், தமிழ் மக்கள் அனைவரும் ஏகோபித்து ஐக்கிய தமிழகத்திற்காகக் குரல் எழுப்ப வேண்டுமென்றும் மக்களைக் கேட்டுக்கொள்கிறது.

2. "மக்கள் துரோகி" மணிக்கவேலருக்குக் கொடும்பாவிகட்டி இழுத்து வரும் போது போலீஸ் வேடம் தரித்த தோழர் பட்சமாலுக்கு கடுங்காவல் தண்டனை விதித்திருப்பதை இக்கூட்டம் கண்டிக்கிறது.

கூட்டத்திற்குத் தோழர் பி. ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

வாலிப முன்னேற்ற வாசகசாலை

கோவை, ஆக. 29—

2-8-52-ந் தேதி வாலிப முன்னேற்ற வாசகசாலை துவக்கவிழா காலை 11மணிக்கு நடைபெற்றது, விழாவில் 45 பேர் கலந்து கொண்டனர். இதில் 9 பேர் கொண்ட ஓர் நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது.

மேற்படி வாசகசாலையில் 25—8—52 மாலை 6-30 மணிக்கு ஆர். கோபால் அவர்கள் தலைமையில் அங்கத்தினர் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு சுமார் 50 பேர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் வாசக சாலையின் அபிவிருத்தியைப் பற்றியும், நடைபெறவிருக்கும் நகரசபைத் தேர்தலைப் பற்றியும் தலைவர் சொற்பொழிவாற்றினர்.

அதன் பின் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேற்றப் பட்டது:—

மேற்படி வாசக சாலையில் அங்கத்தினராய் இருப்பவரும், முற்போக்கு வாதியும், தினசரி மக்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப் போக்க மக்களோடு இரண்டறக் கலந்து வேலை செய்யும் ஊழியர் ஆர். கிருஷ்ணன் அவர்களை நகர சபை தேர்தலில் ஆதரித்து பணி ஆற்றுவதாக ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நம்பியாருக்கு வரவேற்பு

சோழவந்தான், ஆக. 29—

27-8-52ல் சோழவந்தான் ரயில்வே ஸ்டேஷனில் காலை $10\frac{1}{4}$ மணிக்கு தோழர் கே. அனந்தநம்பியார் எம். பி.க்கு இவ்வூர் கம்யூனிஸ்ட் கட்சியின சார்பாக ஒரு வரவேற்பளிக்கப்பட்டது. 1000க்கு மேற்பட்ட மக்கள் கூடி அவரை வரவேற்றார்கள்.

தோழர் நம்பியார் உணவு கண்ட்ரோலை ரத்துசெய்ததுப் பற்றியும், பொனமலை மகாநாட்டுக்கு அனைவரும் வரும்படியும் பேசினர்.

ராஜப்பிரமுகர்களின் அந்தஸ்து மாறும்!

ராஜகோட், ஆக. 30—

காஷ்மீர் ராஜ்யத்திற்கு ஒரு தலைவர் தேர்தெடுக்கப்படுவதை இந்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டதன் விளைவாக இந்திய அரசாங்கம் பி. பிரிவு ராஜ்யங்களின் ராஜப் பிரமுகர்களின் அந்தஸ்தை கவர்னர்களைப் போன்ற அந்தஸ்து படைத்த ராஜ்யத் தலைவர்களாக மாற்ற உத்தேசித்துள்ளது. இதற்காக அரசியல் சட்டம் திருத்தப்பட இருக்கிறது. ஆகவே இது பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்த, இந்திய அரசாங்கத்தின் நன்னம்பிக்கையைப் பெற்றுள்ள சௌராஷ்டிர ராஜப் பிரமுகரான ஜாம்சாஹெப் டில்லி வரும்படி அழைக்கப்பட்டிருக்கிருர்.

குடியிருப்பு மனைகளை விட்டு வெளியேற்றுதீர்

சென்னை முதல் மந்திரிக்கு மகஜர்

சென்னை, ஆக. 29—

தேனாம்பேட்டை குடிசை வாழ்வோர் நலஉரிமை சங்கத்தார், தேனாம்பேட்டையில் கடைகள், மார்க்கெட் கட்ட மைலாப்பூர் மேற்குப்பகுதி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் குடியிருப்பு மனைகளை ஸ்வீரிப்பது சம்பந்தமாக சென்னை முதலமைச்சருக்கு ஒரு மகஜர் அனுப்பியுள்ளனர்,

அந்த இடங்களில் குடியிருப்பவர்களுக்கு வேறு மனைகள் கொடுக்கவேண்டுமென அவர்கள் கோரியிருந்தும் அதை 26ம்தேதி விஜயம் செய்த நகரசபை கமிஷனர் நிராகரித்துவிட்டார். அதற்கு பதிலாக மைலாபூர் செயின்ட்மேரீஸ் ரோட் பக்கத்தில் $10\frac{1}{2}$ செண்டு நிலம் தருவது பற்றி யோசிக்கலாம் என்றும்கூறிவிட்டார். ஆனல் தொழிலாளர்களாகவும், சிறு கடைக்காரர்களாகவும் உள்ள அந்த மக்கள் மைலாப்பூர் போய்க் குடியிருப்பதென்பது முடியாத காரியம்.

இந்த இடங்களை, எழுதப் படிக்கத் தெரியாத மக்கள் சர்க்கார் உத்திரவை அறியாததால், 21 செண்டுக்கு ரூ. 1200, முதல் 1800 வரை கொடுத்து வாங்கியுள்ளார்கள், அதற்கு ரூ. 150 200 வரை நஷ்டஈடு கொடுப்பதாக சர்க்கார் கூறுவது நியாயமல்ல; அந்த ஏழை மக்களால் ஆயுள் முழுதும் சம்பாதித்த பணம் நஷ்டமாவது அவர்களால் தாங்க முடியாதது.

இப்பொழுது அவர்கள் குடியிருக்கும் இடங்களிலிருந்து அவர்களை அப்புறப்படுத்தாமல், மார்க்கெட்டையும் கடைகளையும் வேறு காலி இடங்களில் கட்டுவதுதான் முறையாகும். அப்படி அந்த இடத்தில்தான் மார்க்கெட் கட்ட வேண்டுமென்றால் இன்றுள்ள விலையை (21 செண்டுக்கு ரூ. 2000 முதல் 2500) நஷ்டஈடாக அவர்களுக்கு சர்க்கார் கொடுக்கவேண்டுவது அவசியமாகும்.

இதற்கு முன்னர் பார்க் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை அங்கு குடியிருந்த மக்களின் நலத்தை முன்னிட்டுக் கைவிடப்பட்ட மாதிரி, இப்பொழுதும் இந்த இடத்திலுள்ள மக்கள் மீது அநுதாபம் காட்டவேண்டுமென்று அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-நி.)

"பொறுத்திருந்து பாருங்கள்"

சென்னை, ஆக. 30—

ஆந்திர ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு சென்னை திரும்பிய திரு. டி. பிரகாசத்தை பத்திரிகை நிருபர்கள் பேட்டி கண்டு, "சென்னை சட்டசபையில் ஐ. ஜ. மு. என்ற வடிவத்தில் இருக்கும் பிரஜா-கம்யூனிஸ்ட் கூட்டணி என்ன ஆகும்?" என்று கேட்டதற்கு 'பொறுத்திருந்து பாருங்கள்' என்று பிரகாசம் பதிலளித்தார்.

சோஷலிஸ்டுகளின் உண்மை சொரூபம்!

பிரஜா-சோஷலிஸ்ட் இணைப்பு பற்றி கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி ஏ. கே. கோஷ் வெளியிட்ட அறிக்கையைப் பற்றி தமிழ்நாடு சோஷலிஸ்ட் கட்சி காரியதரிசி ஆர். எஸ். சுப்ரமண்யமும், "ஜனதா" ஆசிரியரும் அபிப்பிராயம் கூறுகையில் "இந்த இணைப்பு கம்யூனிஸ்ட் தந்திரங்களுக்கும் அவர்களின் கனவுகளுக்கும் சாவுமணி அடித்துவிடும்" என்று தெரிவித்துள்ளனர். "எங்க அப்பன் குதிருக்குள் இல்லை" என்று சொல்வதைப்போல் இவர்கள் தங்கள் உண்மை உருவத்தைக் காட்டிவிட்டனர்.

ஐக்கிய முன்னணி பொதுக்கூட்டம்

கோவில்பட்டி, ஆக. 30—

25-8-52ல் ஐக்கிய முன்னணி பொதுக்கூட்டம் இவ்வூர் நகர மன்றத் தலைவர் ஈ. வி. ஏ. வள்ளிமுத்து தலைமையின் கீழ் நடைபெற்றது. கூட்டத்தில் பாப்பாங்குளம் சொக்கலிங்கம் பிள்ளை எம். எல். ஏ. தூத்துக்குடி பீர் இஸ்மாயில் ஆகியோர் காங்கிரஸ் ஆட்சியின் ஊழலையும், நாட்டில் அந்நிய மூலதனப் பிடிப்பைப்பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறினர்கள்.

விவசாயிகள், பொதுமக்கள் மீது பஸ் சார்சார்ஜ்வரி, நில அபிவிருத்தி வரி, நில சர்சார்ஜ வரி ஆகியவற்றைப் போடக்கூடாதென்றும், நெல்லை சதிவழக்குத் தோழர்களை விடுதலை செய்யவேண்டுமென்றும், இர்நகர் லாயல் மில்லில் அநியாயமாக வேலையைவிட்டுநீக்கப்பட்டிருக்கும், தொழிலாளர்கள். குமாஸ்தாக்கள் ஆகியோரை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

நெல்லை, ராமனுதபுரம் சதிவழக்குத் தோழர்களை விடுதலை செய்க!

தூத்துக்குடி, ஆக. 28—

வீரநல்லூர் காந்தி சிலை மைதானத்தில் ஆக. 27-ந் தேதியன்று கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். ஏ. முருகானந்தம் தலைமை வகித்தார்.

திரு. பி. சொக்கலிங்கம் பிள்ளை எம்.எல்.ஏ., ராஜாஜி சர்க்காரின் புதிய வரிக் கொள்கைகளைக் கண்டித்துப் பேசினர்.

மக்களின் வரிப் பணத்தைக் கொண்டு மக்களுக்கு அத்யாவசியமான கல்வி, சுகாதாரம், வைத்திய வசதிகள், தொழிலபிவிருத்தித் திட்டங்களை அமுல் நடத்தாமல், போலீஸ் ஸ்டேஷனகளை அதிகப்படுத்துவதற்கு செலவிடும் சர்க்காரின் போக்கைக் கண்டித்தார்.

தோழர் முருகானந்தம், பழனிச்சாமி ஆகியோர் பேசிய பின், தடுப்புக் காவல் சட்டத்தை வாபஸ்பெற வேண்டுமென்றும், நெல்லை, ராமநாதபுரம் சதி வழக்குக் கைதிகளையெல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்றும், இன்னும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மா.ஆ. சமஷ்டிக்கு பலத்த எதிர்ப்பு

பிளான்டைர், ஆக. 30—

வட, தென் ரொடீஷியாக்களையும். நியாசாலாந்தையும் ஒன்றுகப் பிணைத்து மத்திய ஆப்பிரிக்க சமஷ்டி ஒன்றை சிருஷ்டிக்க பிரிட்டிஷ் சர்க்கார் முயற்சி செய்வதை வன்மையாகக் கண்டித்து நேற்று முடிவுற்ற நியூசாலந்து ஆப்ரிக்க காங்கிரஸின் மகாநாடு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

ஆப்ரிக்க மக்களின் எதிர்ப்பு புறக்கணித்துவிட்டு, சமஷ்டி திணிக்கப்படுமேயானல் விபரீத விளைவுகள் ஏற்படுமென்று மகாநாடு எச்சரித்துள்ளது.

நகரசபை தேர்தலில்

நகர மக்கள் கூட்டணிக்கு ஓட்டளியுங்கள்!

கூர்க்கப்படை முகாம் அருகில் சமாதான இயக்க கண்காட்சி

புதுடில்லி, ஆக. 30—

பாரக்பூர் சப்-டிவிஷனல் சமாதானக் கமிட்டி, பால்டா என்ற இடத்திலுள்ள பிரிட்டிஷ் கூர்க்கப்படை "ரெக்ரூடிங்" முகாமுக்கு அருகில் சமாதான இயக்கப் படங்களின் கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த இடத்தில்தான் பிரிட்டிஷ் கூர்க்கப்படை திரட்டும் தலைமைக் காரியாலமும், போக்குவரத்து முகாமும், விமான நிலையமும் இருக்கின்றன. இங்கிருந்துதான் கூர்க்க சோல்ஜர்களைத் திரட்டி மலேயாவிற்கு அனுப்பி வந்தனர்.

ஆகஸ்ட் 12 முதல் 16வரை 5 நாட்கள் இந்த சமாதானக் கண்காட்சி நடந்தது. இந்த சமயத்தில்தான் அந்த இடத்தில் நவாப் கஞ்ஜ் ஜூபிலன் மேளா என்ற ஒரு திருவிழா அங்கு நடைபெற்றுக்கொண்டிருந்தது. திருவிழாவிற்கு வந்த ஆயிரக்கணக்கான மக்கள் — ஒவ்வொரு தடவையிலும் 25–30 பேர்களாக இந்த சமாதானக் கண்காட்சியைக் கண்டனர். சமாதான இயக்கத் தொண்டர்கள், அந்தப் படங்கள் சித்தரிக்கும் விஷயங்களை எடுத்துச் சொல்லி, வந்த மக்களிடமும் ஐந்துவல்லரசு சமாதான ஒப்பந்த வேண்டுகோளில் கையெழுத்துக்கள் வாங்கினர். 800க்கு அதிகமான கையெழுத்துகள் வாங்கப்பட்டன. மலேயாவிலிருந்து திரும்பி வந்திருந்த பலகூர்க்க சிப்பாய்களும் சமாதான வேண்டுகோளில் கையெழுத்திட்டனர்.

அங்கு வைக்கப்பட்டிருந்த படங்களில் கொரியாவிலும், சீனவிலும் அமெரிக்கர் நடத்தும் விஷக்கிருமி யுத்தம் பற்றிய படங்கள், புள்ளி விபரங்கள், மலேயாவில் பிரிட்டிஷ் கொலைகார நடவடிக்கைகள், ஆகியவையும் இருந்தன. அந்தப் பிரதேசத்தில் இக்கண்காட்சி ஒரு பெரிய பரபரப்பை உண்டு பண்ணியது.

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் கூர்க்கப்படை 'ரெக்ரூடிங்' முகாம்களைக் கலைத்துவிட வேண்டுமென்றும், கூர்க்கப் படைகளை மலேயாவிற்கு அனுப்புவதற்கு பிரிட்டிஷ் ராணுவம் நம்முடைய விமான நிலயங்கள், துறைமுகங்கள், ரயில் போக்குவரத்து வசதிகள் ஆகியவைகளை உபயோகிக்க இந்திய சர்க்கார் அனுமதி கொடுக்கக் கூடாதெனபதையும் சித்தரிக்கும் விசேஷப் படங்களும் வைக்கப்பட்டிருந்தன.

நகர மக்கள் கூட்டணி அமைப்பு

அருப்புக்கோட்டை, ஆக. 29—

கே. எல். விரய்யா இல்லத்தில் நேற்று மாலை 7 மணிக்கு மக்கள் சபை மெம்பர் திரு. எம். டி. ராமசாமி தலைமையில் மக்கள் கூட்டணி அமைக்கப்பட்டது. அதுசமயம் வரப்போகும் நகரசபை தேர்தலில் எல்லா வார்டுகளிலும் போட்டி இடுவது என்றும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு 11 பேர் கொண்ட காரியக் கமிட்டி அமைக்கப்பட்டு "புலி" அடையாளத்தைசின்னமாகவைத்துகொள்ளுவதென்றும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்திற்கு நகர பிரமுகர்களும் முற்போக்கு தோழர்களும் வந்திருந்தனர். (ந-நி.)

வானெலி

செப்டம்பர்—2 செவ்வாய்

சென்னை (41·32மீ)

காலை

7-00	ஸ்வாகதம்
7-15	தமிழில் செய்தி
7-30	டி. கே. ரங்கநாதன் --பாட்டு
8-00	ஆங்கிலத்தில் செய்தி

பகல்

12-30	நடுத்தரப்பள்ளிகளுக்கு
1-00	மாதர்களுக்கு
1-30	கீதமஞ்சரி
1-40	ஹிந்தியில் செய்தி
1-50	கதம்பம்
2-00	தமிழில் செய்தி
2-10	ஸாரங்கி
2-15	உயர்தரப்பள்ளிகளுக்கு

மாலை

4-00	ஆரம்பப் பள்ளிகளுக்கு
4-30	ஐரோப்பிய சங்கீதம்
5-30	என். ராஜம் --வயலின்
6-00	ஆங்கிலத்தில் செய்தி
6-10	அறிவிப்புகள்
6-20	எஸ். வைத்நியநாதன் --பாட்டு
7-00	என். ஸி. வசந்தகோகிலம் (ஒலிப்பதிவு)
7-15	தமிழில் செய்தி
7-30	பேசும் தமிழ்
7-45	திருச்சியில் உள்ளபடி
9-00	ஆங்கிலத்தில் செய்தி
9-30	எஸ். ராஜகோபாலய்யர் --பாட்டு
10-00	வாத்ய இசை

★

திருச்சி (389·6மீ)

காலை

7-00	கீதாரம்பம்
7-15	தமிழில் செய்தி
7-30	எஸ். படமசிவம் பிள்ளை --பாட்டு
8-00	ஆங்கிலத்தில் செய்தி
8-15	சித்ரகானம்

பகல்

12-30	நடுத்தரப்பள்ளிகளுக்கு
1-00	இசைவேளை
1-40	ஹிந்தியில் செய்தி
1-50	கதம்பம்
2-00	தமிழில் செய்தி
2-10	வயலின்
2-15	உயர்தரப் பள்ளிகளுக்கு

மாலை

4-00	ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-30	டி. எஸ். ராஜரத்தினம் --நாகஸ்வரம்
5-45	இசைப் பயிற்சி
6-05	அறிவிப்புகள்
6-10	ஸ்ரீவைகுண்டம் எஸ். பரமசிவம் பிள்ளை-பாட்டு
6-30	கிராம நிகழ்ச்சி
7-15	தமிழில் செய்தி
7-30	திரைகானம்
7-45	மாயவரம் எஸ். ராஜம் --பாட்டு
9-00	ஆங்கிலத்தில் செய்தி
9-15	டி. எஸ். ராஜரத்தினம் --நாகஸ்வரம்

சமூக அபிவிருத்தி திட்டம் பற்றி திரு. டேயின் கருத்து

குமரப்பாவின் கண்டனம் நிதானமற்றது என்கிறர்

புதுடில்லி, ஆக. 30—

டாக்டர் ஜே. ஸி. குமரப்பா சமூக அபிவிருத்தி திட்டங்களைப் பற்றி அவை அமுலுக்கு வருமுன் தாக்கிப் பேசியிருப்பது மிகவும் அவசரப்பட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும் என சமூக அபிவிருத்தித் திட்ட நிர்வாகி திரு. எஸ். கே. டே. கூறினர்.

யந்திர மயமாக்குவது, மனிதர்களைக் கொணடே தொழில்களை நடத்துவது இவையிரண்டினுலேற்படும் நனமை தீமைகளைப்பற்றி காலந்தான முடிவுகட்ட வேண்டும். குமரப்பாவின் நல்லெண்ணத்தை தாம் சந்தேகிக்கவில்லையென்றும் திரு டே கூறினர்.

திரு. குமரப்பாவின் கண்டனத்திற்கு பதில் சொல்லமுடியாமல் டே, மழுப்புகிறர்.

சமூக அபிவிருத்தித் திட்டத்துடன் ஒத்துழைப்பவர்கள் நாட்டின் துரோகிகளைப் போனறவர்கள், தம் நாட்டின் சீர்குலைவை, தங்கள் நாட்டின எதிரிகளுடன் சேர்ந்து வேலை செய்வதன் மூலம் உண்டாக்குபவர்கள் என டாக்டர் ஜே. ஸி. குமரப்பா சமூக அபிவிருத்தித் திட்டம் பற்றிக் கூறியது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

நடக்கவிருப்[பவை]

சென்னை மாணவர் சங்கத்தின் சார்பில் 1-9-52ல் மாலை 5-30 மணிக்கு திருவல்லிக்கேணி கடற்கரையில் மாணவர்களின் அணிவகுப்பு பொதுக் கூட்டம் நடைபெறும். 'பிளிட்ஸ்' ஆசிரியர் திரு. ஆர். கே. கரஞ்ஜியாவும் மற்றவர்களும் பேசுவார்கள்.

ராணிப்பேட்டையில் 1000 குடும்பங்கள் பஞ்சப்பிடிப்பில்!

பீடித் தொழிலாளருக்கு வேலையில்லாததின் விளைவு

இராணிப்பேட்டை, ஆக. 27—

மகாராஜா பீடித் தொழிற்சாலையிலும், கிளையிலும் வேலை இல்லை. நான்குமாத காலமாக, இலை இல்லை என்று காரணம் காட்டி $\frac{1}{2}$நாள், $\frac{1}{4}$நாள் வேலைதான் கொடுக்கப்பட்டு வந்தது. அதுவும் இன்று முதல் நிறுத்தப்பட்டுவிட்டது.

இதன் காரணமாக பெண்கள் உட்பட சுமார் 1000 பேர்களுக்கு பட்டினி கிடக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. முதலாளியை கேட்டால், இலை கொண்டு வர வாகன வசதியில்லை என்கிறர். 23-7-52ல் இது சம்பந்தமாக கலெக்டரிடம் நேரில் சென்று குறைகளை எடுத்துச் சொல்லியும், இதுவரையிலும் ஒன்றும் செய்யப்படவில்லை. ஆகவே சர்க்கார் இதை உடனடியாகக் கவனிக்காவிடில் 1000க்கு மேற்பட்ட பீடித் தொழிலாளிகளின் குடும்பங்கள் பஞ்சத்திற்கு இறையாக நேரிடும்.

தென்னுற்காடு ஜில்லாவில் அரிசி விலை ஏற்றம்

கடலூர், ஆக. 29—

கண்ட்ரோல் நீக்குவதற்கு முன தென்னுற்காடு ஜில்லாவில் அரிசி ரேஷன் விலை 1 படி ரூ. 0-12-3 விற்றது. அதே சமயத்தில் கள்ளமார்க்கெட்டில் 1 படி அணு $11\frac{1}{2}$ முதல் 15 அணு வரையில் விற்றது. ரேஷன் கட்டுப்பாடு எடுபட்டதிலிருந்து நாளுக்குநாள் அரிசியின் விலை செங்குத்தாக உயருகிறது. இப்பொழுது கண்ட்ரோல் எடுபட்ட பிறகு ஒரு படி அரிசி ரூ. 1-4-0 முதல் ரூ. 1-6-0 வரையில் விற்கிறது.

இந்த ஜில்லாவில் கைத்தறி நெசவாளர்களும், ஏழை விவசாயிகளும்தான அதிகம். நெசவாளி வேலையில்லாமல் பஞ்சத்தால் ஆலாய்த் தவிக்கிருன. வாங்கும் சக்தியில்லாத நிலையில் 1 படிக்கு ரூ. 1-6-0 கொடுத்து வாங்குவதென்றால் எப்படி சாத்தியமாகும்? அத்துடன் ராஜாஜியின் காங்கிரஸ் சர்க்கார்கையிலிருக்கும் அரிசி ஸ்டாக்கை இறுக்கிப் பிடிக்க ஆரம்பித்து விட்டது. ரேஷன கடைகளில் இங்கு வாரத்தில் 5 நாள் அரிசி தான கொடுக்கப்படுகிறது. இதனல் பஞ்சம் இந்த ஜில்லாவின் பல பகுதிகளில் தலைதூக்கத் தொடங்கியிருக்கிறது. (ந-நி.)

பொதுநலச் சங்கம்

கீவளூர், ஆக. 30—

திரு. மாரியப்பா அவர்கள் இல்லத்தில் இரவு 8-30 மணிக்கு பொதுநலச் சங்க அமைப்புக்குழு ஏற்படுத்தப் பட்டது.

திரு. எம். கே. பிச்சைய்யாவைத் தலைவராகவும், மற்றும் 14 பேரை அங்கத்தினராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

முன்னேற்ற வாசகசாலை

மேட்டூர், ஆக. 29—

மேட்டூர் வாசக சாலையின் நிர்வாகக்கமிட்டி கூட்டம் தோழர் என். சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தோழர் ர. தங்கவேல் காரியதரிசியாகவும் மற்றும் 3 பேர் நிர்வாகிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தங்கமணி வாசகசாலை

மதுரை, ஆக. 29—

24-8-52ல் தோழர் கே. ஏ. ராஜா மியான தலைமையில் தங்கமணி நிர்வாகக் கமிட்டி கூட்டம் நடைபெற்றது. தோழர் கே. பி. சங்கிலி தலைவராகவும், பி. செல்லையா காரியதரிசியாகவும் மற்ற 11 பேர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வரும் நகரசபைத் தேர்தலில் [illegible] வாசகசாலை நிர்வாகிகள் [illegible] களுக்கே [illegible] தீர்மானிக்[illegible]

பிரஞ்சு ஏகாதிபத்திய பேயாட்சி தர்பார் தீவிரப்படுகிறது

தொழிலாளர் தலைவர் கைது

கடலூர், ஆக. 29—

திரு. எட்டிய[ப்ப] நாய்க்கரை 25-8-52ல் [பிரெ]ஞ்சிந்திய போலீஸ் கைது [செ]ய்து புதுச்சேரி சிறையில் [விசா]ரிமாண்டில் வைத்திருக்கிற[ர்கள்].

திரு. எட்டி[யப்ப] நாய்க்கருக்கு வயது [illegible] இருக்கும். இவர் காந்திஜி[illegible] வார்தா ஆஸ்ரமத்தில் [illegible] வருஷம் இருந்தவர். [illegible] நெசவாளியில் [illegible] கொண்டி[illegible] இவர் கத[illegible] வைத்து [illegible] 1935 [illegible] ஜெயில் தொழிற்ச[illegible] முன்னியனில் பங்கு கொண்டவர். அதற்காக பிரெஞ்சு ஏகாதிபத்தியம் 1937 முதல் இவரைப் பலமுறை தண்டித்து சிறையிலடைத்தது.

1947 ஆகஸ்டில் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை இந்திய மண்ணிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று புதுச்சேரியில் தோன்றிய இயக்கத்தில், திரு. எட்டியப்ப நாயக்கர் ஓர் சிறந்த தேச பக்தர் என்ற முறையில் போராட்டத்தில் முன்னணியில் நின்றர். அதற்காக, அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அவர் 25 வருஷம் வேலை செய்திருந்த [illegible]

பாகூர் (பிரெஞ்சு எல்லையில்) சென்றிருந்த போது பிரஞ்சு போலீஸ் கைது செய்து சிறையிலடைத்து இவர் மீது பொய்க் குற்றம் சுமத்தி விசாரணை நடத்தி வருகிறது. (ந-நி.)

[illegible]

[illegible] 30—

[illegible] ரன்ஸ் திட்[டம்] [illegible] ராஜ்யத்தில் [illegible] கப்படும் பிராந்திய [illegible] முதல் கூட்டத்தை இந்திய சர்க்கார் தொழிலாளர் மந்திரி வி. வி. கிரி 1952 செப்டம்பர் 8ந்தேதியன்று ஆரம்பித்துவைப்பார். ராஜ்ய சர்க்கார், தொழிலதிபர்கள் தொழிலாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளும், தொழிலாளருக்கான அரசாங்க இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷனின் பிராந்திய டைரெக்டரும் இந்த போர்டில் அங்கத்தினர்களாக இருப்பார்கள். இந்த[illegible] டானது சுகாதார இ[ன்ஷூ]ரன்ஸ் திட்டம் வேலை [செய்]வருவதைப் பரிசீலனை [illegible] இந்தப் பிரதேசத்தி[ல்] திட்டம் சுமுகமாகவும் [illegible]

அட்டி தங்க சுரங்கத் தொழிலாளர் சங்கநாதம்

ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு

ரெய்ச்சூர், ஆக. 28—

ஐதராபாத் சமஸ்தானத்திலுள்ள அட்டி தங்க சுரங்கத் தொழிற் சங்கம் 16 கோரிக்கைகளை நிர்வாகத்தின் முன வைத்துள்ளது. 24-8-52ல் சங்கத்தின் சார்பில் காலை 9 மணிக்கு காந்தி மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சங்கத் தலைவர் எம். எஸ். கே. சர்மா தலைமை வகித்தார்.

நிர்வாகத்திடம் சமர்ப்பித்துள்ள 16 கோரிக்கைகளை விளக்கிவிட்டு அவர் பேசுகையில், "கம்பெனியார் செய்த தில்லுமுல்லுகளை இதுநாள் வரையில் [illegible]வந்தோம். இனிமேல் [illegible] மதிக்கப் போவதில்லை. [illegible]னேஜ்மெண்டாரும், [illegible]காரும் தொழிலாளிகளின் நியாயமான கோரிக்கைகளைத் தீர்த்து வைக்க வேண்டு" மென்றும் தொழிலாளிகள் தங்களுடைய கோரிக்கைகளை வற்புறுத்துவதற்காக 25-8-52-ல் காலை $6\frac{1}{2}$ மணிக்கு தொழிலாளர் அனைவரும் ஊர்வலமாகச் சென்று கோரிக்கைகளடங்கிய மகஜரை சமர்ப்பிக்க வேண்டுமென்றும் கூறினர்.

பின்னர் மலேய போராட்டத்தை அடக்க இந்திய சர்க்கார் பிரிட்டிஷ் சர்க்காருக்கு கூர்க்கப் படைகளைத் திரட்ட அனுமதியளித்திருப்பதை அவர் கண்டித்தார்.

உதவிச் செயலாளர் தோழர் பி. நாராயணன் தடுப்புக் காவல் சட்டம் வாழ்க்கை வசதிகளுக்காகப் போராடும் மக்களின் மேல் திணிக்கப் படும் சட்டமென்றும், ஆகவே அதை உடனே ரத்துசெய்ய வேண்டுமென்றும் கூறினர்.

சங்க நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர் பாடுபட்டுழைக்கும் பாட்டாளி மக்களின் பகைவர்களை எதிர்த்துப் போராடும் ஜனசக்தி பத்திரிகையை ஒவ்வொரு தொழிலாளியும் வாங்கிப் படிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

வட கொரியரிடம் புதிய விமானங்கள் அமெரிக்கர் கிலி!

டெட்ராய்ட், ஆக. 30—

வட கொரியர்கள் முதல் தடவையாக 'மீடியம்' வெடிகுண்டு விமானங்களை உபயோகிக்க முற்படலாமென்றும், அதனல் கொரியா[வி]ல் விமான யுத்தத்தின் [தன்]மையே மாறிவிடுமென்[று]ம், அமெரிக்க விமானப் படை காரியதரிசி தாமஸ் கே. பின்லெட்டர்என்வர் அலறுகிருர்.

சமீபத்தில் தன்னுடைய தூரக்கிழக்கு விமானப் படைக்கு ரஷ்யா ஒரு புதிய இரண்டு மெஷீன்களையுடைய —கனமில்லாத— விமானமொன்றை சேர்த்துள்ளதென்றர். அதை சமாளிக்க அமெரிக்கா தன்னுடைய தூரக்கிழக்கு விமானப்படையின் தாக்குதல் சக்தியை இருமடங்காக [illegible]யிருக்கிறதென்றும் கூறினர்.

அவர் மேலும் கூறுகையில், சீன விமானப் படையில் இப்பொழுது சுமார் 2100 விமானங்களிருக்கிறதென்றும் அவைகளில் பெரும்பாலும் சோவியத் யூனியனில் உற்பத்தி செய்யப்பட்டதென்றும் கூறினர். அவைகளில் 1300 விமானங்கள் "எம். ஐ. ஜி-15" என்ற ஜெட் (போர்) விமானங்களாம்.

அன்னிய மூலதன ஆதி[illegible] [illegible]க்கு

[illegible]திய [illegible]யின் எதிர்ப்பு

[illegible]

தெ. இ. ரயில்வேத் தொழிலாளர் 12, 13-வது மகாநாடு

1952 செப்டம்பர் மாதம் 12, 13, 14 தேதிகளில் பொன்மலை சங்கத்திடலில் நடைபெறும்.

திரு. எஸ். ஏ. டாங்கே

மகாநாட்டிற்குத் தலைமை தாங்க இசைந்துள்ளார்

திரு. கே. டி. ஷா

ஐ.தொ. காங்கிரஸின் தலைவர் (பம்பாய்) மகாநாட்டைத் திறந்து வைப்பார்

திரு. பி. ராமமூர்த்தி, எம்.எல்.ஏ.

கொடி ஏற்றி வைப்பார்.

திரு. வி. சக்கரை செட்டியார், எம். எல். ஸி., அ.இ.தொ.ச. காங்கிரஸ் தலைவர். திரு. எஸ். குருசாமி, எம்.பி., அ.இ.ர. தொ.ச. பொதுக்காரியதரிசி முதலியோரும் கலந்துகொள்வர். திரு. டி.பி. வேதாசலம், பி.ஏ.பி.எல்., அழைக்கப்பட்டுள்ளார்.

2-வது நாளன்று

ரயில் உபயோகிப்பவர் மகாநாடு

நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. [illegible] எம்.எல்.ஏ. தலைமை தாங்குகிறார்.

திரு. எஸ்.பி. ஆதித்தன், எம்.எல்.ஸி. திறந்து வைப்பார்

3-வது நாளன்று

பெண்கள் மகாநாட்டிற்கு

திருமதி. பார்வதி கிருஷ்ணன், தலைமை வகிக்கிறார். [illegible]

[illegible]

Edited, Printed & Published by G. Alavandar, at Janasakti Press, Subodhaya Buildings, 38, Mount Rd, Madras 6.